වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
ANNUAL REPORT 2019

ශ්‍රම වාසනා අරමුදල
சிரம வாசனா நிதியம்
SHRAMA VASANA FUND



www.svf.gov.lk

பொருளடக்கம் பக்கம்

நிறுவனம் பற்றிய தகவல்கள்

* தொலைநோக்கு மற்றும் செயற்பணி 01
* அடிப்படை மதிப்புகள் மற்றும் விழுமியங்கள் 02

சிரம வாசனா நிதியம்

* நிதியத்தின் குறிக்கோள்கள் 03
* நிருவாகக் கட்டமைப்பு 04
* துணைக் குழுக்கள் 05-06
* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முடிபுகள் 07-12
* நிறுவகக் கட்டமைப்பு 13
* சிரம வாசனா நிதியத்திற்கான பங்களிப்புகள் 14
* சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி மற்றும் லொத்தர் வருமானம் 15
* நிதிச் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு 16-17
* சிரம வாசனா நிதியத்தின் சிறப்புகள் 1998-2019 18-19
* எதிர்நோக்கவுள்ள சவால்கள் மற்றும் பொறுப்புகள் 20-21
* நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு- 2019 22-36
* பயனாளிகள் பற்றிய தொகுப்பு 37

நிதிசார் தகவல்கள்

* நிதி நிலைமை பற்றிய கூற்று 39
* நிதிச் செயலாற்றுகைக் கூற்று 40
* பணிக்கொடை மாற்றக் கூற்று 41
* பண ஓட்டக் கூற்று 42
* கணக்கீட்டு நியமங்கள் 43-49
* கணக்குக் குறிப்புகள் 50-54
* கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 55-62
* கணக்காய்வு அறிக்கை பற்றி பணிப்பாளர்கள் சபையின் மீளாய்வு 63-65
* பின்னிணைப்பு 66-68

தொலைநோக்கு மற்றும் செயற்பணி ...

தொலைநோக்கு

"திருப்திமிகு தொழிலணி"

செயற்பணி

" உழைக்கும் வர்க்கத்திற்கு சேமநலனை வழங்குவதும், அனர்த்தமொன்றின்போது தற்போதிருக்கின்ற பொறிமுறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் உன்னதமான வேலைச் சூழலொன்றை உருவாக்குவதும்"

அடிப்படை மதிப்புகள் மற்றும் விழுமியங்கள்

- சிரம வாசனா நிதியத்திடமிருந்து பயனடைகின்ற சேவைநாடுநர்களுக்கு பயனுறுதி வாய்ந்ததும், வினைத்திறனுடையதுமான சேவையை வழங்கும் நோக்கில் ஒழுங்கு முறையான கடப்பாட்டினை உறுதிப்படுத்துதல்.

- சேவை நாடுநர்களுக்கு சேவையை வழங்குகின்ற அதேவேளை, சிரம வாசனா நிதியத்தின் ஒழுங்குகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமையியல்களுக்கு அமைவாக உயரிய தரமான சேவையை வழங்குதல்.

- சிரம வாசனா நிதியத்தால் வழங்கப்பட்டுள்ள சேவைகள் தொடர்பாக சேவைநாடுநர் களுக்கிடையில் சிறந்தமுறையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதியமானது, பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தினால் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். சட்டத்தில் வரையப்பட்ட 07 பரந்த குறிக்கோள்களின் கீழ் இந்நிதியமானது, அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக எண்ணிக்கையிலான சேமநல நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்திருந்த துடன், அதன் மூலம் இலங்கை பணியாளர்களைத் தரமுயர்த்துவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தது.

சிரம வாசனா நிதியத்திற்கான பிரதான வருமான மூலமான தேசிய லொத்தர் சபையின் பங்களிப்பு 'ஜாதிக சம்பத' லொத்தரின் விற்பனை காரணமாக அதிகரித்திருந்ததுடன், அதன்மூலம், பணியாளர்களின் சேமநலனுக்காக வழங்க வேண்டிய உரிய சேவைகளும் அதிகரித்திருந்தன.

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்

(அ) பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல்.

(ஆ) மக்கள் பணிபுரிகின்ற தாபனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகையில் அத்தகைய தாபனங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

(இ) அவசர நிலைமையின்போது பணியாளர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய உதவி களை வழங்குதல்.

(ஈ) பணியாளர்களுக்கெதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றபோது தற்காலிக உதவிகளை வழங்குதல்.

(உ) அனர்த்தங்களின்போது அவர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்போர்களுக்கும் நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல்.

(ஊ) பணியாளர்களின் சேமநலனுக்காக சிறந்த சேவைகளை வழங்குபவர்களைக் கௌரவித்தல்.

(எ) பணியாளரொருவரின் தொழில் முடிவுறுத்தப்படுதல் அல்லது தொழிற்றுறைப் பிணக்கு தொடர்பாக, தொழில் ஆணையாளர் அதிபதியின், நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தின் முன் ஏதேனும் எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற அல்லது நிலுவையிலிருக்கின்ற நடவடிக்கைமுறையின்போது பணியாளருக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதி நிவாரணம் வழங்கப்படுகின்றது.

சிரம வாசனா நிதியத்தின் நிருவாகக் கட்டமைப்பு

சிரம வாசனா நிதியம், 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்ததுடன், இதற்கு தொழில் அமைச்சின் செயலாளர் தலைமை வகிக்கின்றார். சிரம வாசனா நிதியச் சட்டத்திற்கமைவாக சிரம வாசனா நிதியத்துடன் தொடர்புபட்ட நிதியினை நிருவகிக்கின்ற முழுமையான பொறுப்பும் சிரம வாசனா நிதியப் பணிப்பாளர் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதுடன், இதன் நிதி முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புபட்டுள்ள அனைத்து விடயங்களும் பணிப்பாளர் சபைக்கே உரித்தளிக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில் சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர்கள் சபை

பெயர்	பதவி
திரு.ஆர்.பீ.ஆர்.ராஜபக்ஷ	தவிசாளர்
திரு.ஏ.விமலவீர	அங்கத்தவர்
திருவதி.எச்.எம்.பீ.சீ.குமாரிகாமி	அங்கத்தவர்
திரு.வீ.ஜீ.விஜேசிறி	அங்கத்தவர்
திரு.டீ.எம்.குணசேகர பண்டா	அங்கத்தவர்
திரு.இ.ஏ.நாரத எதிரிசிங்க	அங்கத்தவர்
திரு.டி.ஆர்.ஜயலத்	பொது முகாமையாளர் - சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதியத்தில் தாபிக்கப்பட்டுள்ள துணைக்குழுக்கள்

1. அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2. அனுகூல விடயக் குழு

3. முன்னேற்ற மீளாய்வுக் குழு

அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

சிரமவாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு சுதந்திரமான பிரிவொன்றாகும். இக்குழு பணிப்பாளர்கள் சபையின் இரண்டு உறுப்பினர்கள், திறைசேரியின் பிரதிநிதியொருவர், அவதானிப்பாளராக கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியொருவர், தொழில் அமைச்சின் பிரதம நிதி அலுவலர் மற்றும் சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது. இந்த குழுவின் பிரதான குறிக்கோள், நிதியத்தின் நிறுவனம்சார் நிருவாகம், சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களினது அடிப்படையில் பயனுறுதியையும், ஆக்கத்திறனையும் ஊக்குவித்தல், கூட்டுத்திட்டம் மற்றும் செயற்றிட்டத்தின் வகைப்பாடு/பரிந்துரைகள், கணக்கீட்டுச் செயற்பாடு களை நடத்துவதில் நிதிக் கூற்றுக்களில் நம்பகத்தன்மையை அறிக்கையிடுவதனைப் பாதிக்கின்ற ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல், மோசடிகள், குறைபாடுகளைத் தடுத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற அத்தகைய தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல் போன்ற அத்தகைய பணி இலக்குகள் பற்றி தேவையான ஆலோசனையை வழங்குவதாகும்.

அகக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் / தவிசாளர், நிதியத்தின் தவிசாளருக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன், இந்த கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

சிரம வாசனா நிதியத்தின் கணக்காய்வுக் குழு-2019 பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

1. திருவதி.எச்.என்.பீ.சி.குமாரிகாமி	குழுவின் திறைசேரி முகவர் / தவிசாளர்
2. திருவதி.எம்.வீ.கே.பீரிஸ்	தொழின் அமைச்சின் / குழுவின் பிரதம நிதி அலுவலர்
3. திரு.டீ.எம்.வி.எச்.ஜயதிலக	கணக்காய்வு அத்தியேட்சகர் / கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதி /குழு உறுப்பினர்
4. திரு.டி.ஆர்.ஜயலத்	சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளர்
5. திருவதி.எம்.எல்.ஜயமாலி	சிரம வாசனா நிதியத்தின் கணக்காளர்
6. திரு.ஜீ.ரூபகரன்	தொழின் அமைச்சின் அகக் கணக்காய்வாளர் / குழு உறுப்பினர்
7. திரு.ஏ.டபிள்யூ.பீ.சைலாவா	சிரம வாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வாளர் / குழு உறுப்பினர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அடிப்படைத் தொழிற்பாடுகள்

1. கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் செயல்முறையினைச் செம்மைப்படுத்துவதற்கு சிரம வாசனா நிதியத்தின் தற்போதிருக்கின்ற கணக்குகளை மீளாய்தலும் மதிப்பிடுதலும்.

2. நிதியத்தின் முன் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடையும் நோக்கில் எழக்கூடிய ஏதேனும் பிரச்சனையின் தாக்கத்தை ஆராய்தல்.

3. விசேடமாக, சொத்துக்கள் சேதமடைவதிலிருந்து, மோசடியிலிருந்து பாதுகாப்பாக உள்ளதா என்பது பற்றி அறிந்திருத்தல்.

4. கொடுக்கல் வாங்கல்களின் அவசியம் பற்றியும், நன்மைகள் பற்றியும் ஆராய்தல், இலாப, நட்ட அறிக்கைகள் மற்றும் வீணான, வழமைக்கு மாறான மேலதிக செலவீனம், சொத்துக்களை அகற்றுதல் காரணமாக உறப்பட்ட செலவு கழிப்பனவுகள் பற்றி ஆராய்தல்.

5. கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கும், கணக்காய்வுத் தீர்மானங்களை வகுத்தமைப் பதற்கும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரிவுகளின் தலைவர்களுக்கிடையில் விநியோகித்தலும்.

6. கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

7. நிதியத்தின் தவிசாளரின் அல்லது பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் விசேட விசாரணைகளை நடத்துதல்.

8. நிதியத்தின் தவிசாளரால் / பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களுக்கு உதவி செய்தலும், பரிந்துரைகளைச் செய்தலும்.

வரப்பிரசாத விடயத்துக்கான குழு

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோளின்படி, புலமைப்பரிசில்களை வழங்குதல், மருத்துவ உதவிகளை வழங்குதல் மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பணிப்பாளர்கள் அதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில் குழுவினூடாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

வரப்பிரசாத விடயத்துக்கான குழுவானது, நிதியத்தின் பொது முகாமையாளர், வரிசை அமைச்சின் சட்டப் பிரிவு அலுவலர் மற்றும் தொழில்சார் மருத்துவர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது. சரியான முறையில் பயளாளிகளைத் தெரிவுசெய்வதற்கு இக் குழு உதவுகின்றது.

முன்னேற்ற மீளாய்வுக் குழு

காலத்திற்குக் காலம் கணக்காய்வு ஆலோசனையின் பேரில் சிரம வாசனா நிதியத்தின் கௌரவ பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் குழுவொன்று உருவாக்கப்படுகின்றது. சிரம வாசனா நிதியத்தின் நாளாந்த கடமைகளை ஆற்றுவது இதன் பிரதான தொழிற் பாடாகும். இக்குழு, நிதியத்தின் முகாமையாளர், கணக்காளர், மற்றும் உதவி முகாமை யாளர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது என்பதுடன், குறிப்பாக இக்குழு நாளாந்த செயற்பாடுகளைப் பரிசோதிப்பதுடன், நிறைவுசெய்யப்பட்ட கோப்புகளை மற்றும் திட்ட மிடப்பட்ட வேலையையும் உண்மையான நிலைமையும் தயாரித்தல் அத்துடன் பிழைகள், குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குகின்றது. இக்குழு, நிதியத்தின் கோப்புகளை எந்தக் குறைபாடுகளுமின்றி பேணுவதற்கு உதவியுள்ளதுடன், நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக நடத்தியுமுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்

முதலாவது காலாண்டு

தொடர் இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	பொறுப்புவாய்ந்த அலுவலர்
01	சிரம வாசனா நிதியத்துக்கு அகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல்.	சிரம வாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக வந்துள்ளதுடன், தொழில் அமைச்சின் செயலாளர் தொழில் திணைக் களத்திலிருந்து அலுவல ரொருவரை வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமித் துள்ளார் என்று அறிவித் துள்ளதாக நிதியத்தின் பொது முகாமையாளர் தெரிவித் துள்ளார். அதுவரையில் தொழில் அமைச்சின் அகக் கணக்காய்வுப் பிரிவினால் சிரம வாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வினை நடத்துவது பொருத்தமானது என்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தமையால், பிரதம அகக் கணக்காய்வாளர் அதனுடன் இணங்கியிருந்தார்.	வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவல கத்தினால் தரம் 1 கணக்காளர் ஒருவர் புதிய அகக் கணக்காய் வாளராக நியமிக்கப்பட்டு தற்போது அகக் கணக்காய்வு நடத்தப் படுகின்றது.
02	2019 ஆம் ஆண்டுக் கான செயற்றிட்டமும் வரவுசெலவுத்திட்டமும்	2019 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டமும் வரவுசெலவுத் திட்டமும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் திறைசேரிக்கு அனுப்பப் பட்டுள்ளதென்று சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	சிரம வாசனா நிதியம் தொடர்பிலான 2019 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டமும் வரவு செலவுத் திட்டமும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் திறைசேரிக்கு அனுப்பப் பட்டுள்ளது.
03	அகக் கணக்காய்வுத் திட்டம் 2019	கணக்காய்வுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அகக் கணக்காய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது நிறுவனத்தின் பொறுப்பு என்று அரசாங்க கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார்.	2019 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது, மூன்றாவது காலாண்டுக்காக தயாரிக்கப் பட்டுள்ள அகக்கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அகக்கணக்காய்வுத் திட்டம் மீளாயப்பட்டு நிதிக் கணக்காய் விலும் பார்க்க முறைமைசார் கணக்காய்வு மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது.
04	இணையத்தள முறைமை	சிரம வாசனா நிதியமானது இணையத் தள முறைமையை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் பற்றி விசாரித் துள்ளதென்றும் இணையத்தள	கணினி மென்பொருளைப் பயன்படுத்தி அதன் செயற் பாடுகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்தை இயலச்செய்து 2019 ஆம் ஆண்டின்

		கட்டம் 3 வரை நிறைவு செய்யப பட்டுள்ளதென்று பொது முகாமை யாளர் தெரிவித்திருந்தார்	இறுதியளவில் முறைமையின் மூன்று கட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
05	சிரம வாசனா நிதியத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள்	நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கணினி உபகரணத்தின் கொள் வனவு பற்றிய பிரதம அகக் கணக்காய் வாளர் விசாரித்திருந்ததுடன் மீள் கணக்காய்வு செய்யப்பட்ட துடன், இதற்காக குழு நியமிக்கப்பட்டது. வருடாந்த கணக்குகளைத் தயாரிக்கின்ற போது இலங்கை கணக்கீட்டு நியமங்களா அல்லது அரச துறை கணக்கீட்டு நியமங்களா பயன்படுத்த வேண்டும் என்று பொது முகாமையாளர் கேட்டிருந்தார். சிரம வாசனா நிதியத்துக்கு இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டு மென்றும், நிறுவனத்தின் கொள்கைகள் நியமங்களுக் கமைவாக வகுத்தமைக்கப் படுதல் வேண்டுமென்பதுடன், கணக்கில் வெளிப்படுத்தப் படுதலும் வேண்டும் என்று கண்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். 5,000/ ரூபாவுக்குக் குறைவான தொகை நிதிக்கூற்றில் மூலதனமாக இடப்படுதலாகாது என்றும், மூலதனச் செலவீனம் அல்லாததாக இனங் காணப்படுதல் வேண்டும் என்றும் தெரிவித்து சுற்றிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், அகவே, பொருட்பட்டியலில் மட்டும் உள்ளடக்கினால் போது மான தென்று அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார்.	புதிய அரச கணக்கீட்டு நியமங்கள் பற்றி நிறுவகத்தின் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, சரியான கணக்குகளைப் பேணுவதற்கு உதவும்.
06	கோப்புக்களைத் தயாரித்தல்	சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட அனைத்து நிகழ்ச் சித்திட்டங்களுக்குமான கோப்பு களைத் தயாரிப்பதில் கால தாமதம் காணப்பட்டிருந்ததாக கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். கோப்புகள் உரிய முறையில் தயாரிக்கப் படுவதைப் பார்வையிடுவதற் காகவும் அதன்படி மேற்பார்வை யிட்டு சபைக்கு மாதாந்த அடிப்	முன்னேற்ற மீளாய்வுக் குழு வொன்றை அமைப்பதன் மூலம், அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான கோப்பு களைத் தயாரிப்பதில் உள்ள பிழைகளைத் திருத்து வதற்கும், அதனை மேற் பார்வையிட்டு மாதாந்த அடிப்படையில் அதனது அறிக்கையை பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிப்பதற்குமான

		படையில் அதனது அறிக்கை யைச் சமர்ப்பிப்பதற்கும் முன்னேற்ற மீளாய்வுக் குழு வொன்று அமைக்கப்பட்டுள்ள தாக பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	வேலை ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளது.
07	நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்	நிகழ்ச்சித்திட்டங்களை கூட்டுத் திட்டத்திற்கமைவாக மேற் கொள்ளும் நோக்கில் நாட ளாவியரீதியில் மேற்கொள்ளப் படுமென்று கண்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார்.	ஐந்தாண்டு கூட்டுத் திட்டத்திற் கமைவாக மேற்கொள்ளப் படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் நாடளாவியரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
08	நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.	செயற்கை உறுப்புகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங் களில் சிரம வாசன நிதியத்தின் குறிக்கோள்கள் அடையப் பட்டிருந்ததா என்றும், மருத்துவ பரிசோதனையின் பின்னர் கைகள் மற்றும் கால்கள் சரியான ஆட்களுக்கு வழங்கப் பட்டிருந்ததா என்று கண்காய்வு அத்தியேட்சகர் வினவியிருந்தார். செயற்கை உறுப்புகள் மருத்துவ பரிசோதனையின் பின்னர் சரியான பயனாளிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த தாகவும், எதிர்காலத்தில் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி, நிறுவனங்களைப் பதிவுசெய்து தெரிவு செய்யப்பட்ட நிறுவனங் களுக்கு இரண்டு தவணை களாக செலுத்துவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித் திருந்தார். வலுப்படுத்தல் நிகழ்ச் சித்திட்டங்களிலும்கூட பயனாளி களுக்கு விநியோகிப்பதற்கு முறையான செயல்முறை யொன்றினைப் பயன்படுத்தி உரிய முறையில் பயனாளி களுக்கு பொருட்கள் விநி யோகிக்கப்படுதல் வேண்டு மென்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித் திருந்தார்.	முன்னைய செயற்கை உறுப்பு களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் தொழில்நுட்ப தவறு காரணமாக அது இடைநிறுத் தப்பட்டிருந்ததுடன், அது தற்போது இரண்டு பத்திரிகை விளம்பரங்களில் பிரசுரிக்க முடிந்திருந்ததுடன், தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு இரண்டு தவணைகளாக (ஆகக் கூடியது 50,000 /- ரூபா என்பதற்கமைவாக) வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டு

தொடர் இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	பொறுப்புவாய்ந்த அலுவலர்
.01	2018 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் அதிபதியின் இறுதி கணக்காய்வு அறிக்கை	கணக்காய்வாளர் அதிபதி 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தகைமையான கருத்தினை வெளியிட்டுள்ளார் என்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். அதில் குறிப்பிடப் பட்டுள்ள சில காரணிகளுக்கமைவாக நிதிக்கூற்றுக்கள் திருத்தப்பட வேண்டி யுள்ளது என்று அது வெளிப்படுத்தி யுள்ளது.	நிறுவனமானது, தாபன விதிகள் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை வழிகாட்டல்கள் போன்ற வற்றுக்கமைவாக பராமரிக் கப்படவுள்ளதுடன், பணிப்பாளர்கள் சபையின் வழிகாட்டல்களுக்கமைவாக சரிசெய்ய வேண்டித் தேவைப்படுகின்ற நிலுவை களைச் சரிசெய்கின்றது.
02	லொத்தர் வருமானம்	லொத்தர் வருவாய் 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக வீழ்ச்சி யடைந்திருந்ததாக கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்குக் காரணம் ஏப்பிரல் மாதத்தில் ஏற்பட்ட குழப்பமாகும் என்றும், அது மீண்டும் அதிகரித்துச் செல்கின்றதென்று முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	பணிப்பாளர்கள் சபையுடன் ஆலோசித்து, எதிர்காலச் செயற்பாடுகள் பற்றி பணிப்பாளர்கள் சபை தொகுத்துள்ளது.
03	செயற்றிட்டம்	நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவனத்தின் செயற்றிட்டத்திற்கமைவாக மேற் கொள்ளப்படுதல் வேண்டுமென்றும், மாற்றங்கள் இருந்தால், செயற் றிட்டத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்றும் கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்றிட்டத்திற்கமைவாகவே மேற் கொள்ளப்படுகின்றனவென்றும், குறைந்தளவு முன்னேற்றம் ஏற்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகளவு அவதானம் செலுத்தி தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும் என்று பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	இது தொடர்பில், பணிப்பாளர்கள் சபையால் நியமிக்கப்பட்ட குழு, குழுவின் அறிக்கைக் கமைவாக எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுமாறு சபையினைப் பணித்துள்ளது.
04	மனித வள முகாமைத்துவம்	மனித வள முகாமைத்துவம் தொடர்பாக 2018 ஆம் அண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார்.	2019 ஆம் ஆண்டுக்கான மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள துடன், உரிய செயற்பாடு கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன


மூன்றாவது காலாண்டு

தொடர் இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	பொறுப்புவாய்ந்த அலுவலர்
01	சொத்து மதிப்பீடு	2018.12.31 ஆம் திகதியிடப்பட்ட கடந்த ஆண்டின் விபரமான கணக்காய்வு அறிக்கையில் உரிய சொத்து வகுப்பு அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன்படி உரிய நிலையான சொத்தின் இடம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். இது அடுத்த ஆண்டில் திருத்தப்படுதல் வெண்டுமென்று நிதி அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.	தற்போது புதிய நியமங்களுக்கமைவாக சொத்து வகுப்பு மீள கணிக்கப்பட்டுள்ளது.
02	பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள்	பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் மட்டுமே காணப் பட்டிருந்ததாக கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். பணிக்கொடை, தொழில் அணையாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி அடிப்படைச் சம்பளத்தின் மீதே கணிக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.	தொழில் அணையாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி அடிப்படைச் சம்பளத்தின் மீதே பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
03	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவை	நிறுவனத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பற்றிய வெளிப்படுத்தல் அரச கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக மேற் கொள்ளப்படுதல் வேண்டுமென்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார்.	சிரம வாசனா நிதியத்தில் 2013 ஆம் ஆண்டில் பணி யாற்றியிருந்தமுகாமைத்துவ உதவியாளர் மதுஷங்க மற்றும் சுருக்கெழுத்தாளர் டுஸ்மந்த பியதாஸ ஆகியோர் தவறான நடத்தைக்காக 2016 ஆம் ஆண்டில் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். அவர்களால் தொழில் நியாய சபையில் தாக்கல் செய்யப்பட்ட மேலுள்ள வழக்கு தற்போது பொறளை தொழில் நியாய சபையில் நிலுவை யிலுள்ளது.
04	வருடாந்த செயற்றிட்டம்	செயற்றிட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள சில நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லையென்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித்திருந்தார். அவை பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட்டு செயற்றிட்டம் மீளாயப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென்று பிரதம நிதி அலுவலர் தெரிவித்திருந்தார்.	இது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களிலும், பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டு காலத்திற்கு காலம் மீளாயப்படுகின்றது

நான்காவது காலாண்டு

தொடர் இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	பொறுப்புவாய்ந்த அலுவலர்
சிரம வாசனா நிதியச் சட்டத்துக்கான திருத்தம்			
01	சிரம வாசனா நிதியச் சட்டத்துக்கான திருத்தம்	சிரம வாசனா நிதியச் சட்டத தினைத் திருத்துவதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித் திருந்தார். ஏனைய உறுப்பினர்கள் புதிய திருத்தங்கள் எவை என்று கேட்டிருந்தனர். சிரம வாசனா நிதியச் சட்டத்தின்படி, லொத்தர் "சிரம வாசனா" என்று அழைக்கப்படுதல் வேண்டும். தற்போது, "ஜாதிக சம்பத" என்ற பெயரில்தான் வெளி வருகின்றது. பதிய திருத்தத் தின்படி அது எந்தப் பெயரிலும் வெளியிடப்படலாம் என்று பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார். சட்ட உதவியானது "தொழில் தருநர்" ஒருவருக்கே செலுத் தப்படுதல் வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. இருப் பினும், சட்ட உதவியானது பணியாளர் ஒருவருக்கே செலுத்தப்படுதல் வேண்டும் என்று அது "பணியாளர்" என்று திருத்தப்பட்டதாக பொது முகாமையாளர் தெரி வித்திருந்தார். சட்டமானது லொத்தர் விற்பனையை அதிகரிப்பதற் கான சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கின்ற செயற்பாடு களுக்காக பயன்படுத்தப் படுதலாகாது என்றும் புதிய திருத்தம் விளம்பரச் செயற் பாடுகளில் செலவுறுவதற்கு அனுமதிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது என்ற பொது முகாமையாளர் கூறியிருந்தார்.	திருத்தத்துக்கான வரைவு, கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திற்கு அனுப்புவதற்குத் தேவையான வேலைக்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

2019.12.31 இலுள்ளவாறு நிறுவகக் கட்டமைப்பு



சிரம வாசனா நிதியத்திற்கான பங்களிப்புகள்

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பாராளுமன்றத் தினால் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கக்கூடியவாறான பணத்தொகைகள் அனைத்தும்.


(ஆ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களின் மானியங்கள், நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற பணத்தொகைகள் அனைத்தும்.

(இ) நிதியம் முதலீடு செய்வதனூடாக வருமானமாகப் பெறப்படுகின்ற பணத்தொகைகள் அனைத்தும்.

(ஈ) சட்டத்தின் 13 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள லொத்தர்களினால் பெறப்பட்ட பணம் உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதில், அதன் பணிகளை ஆற்றுவதில் நிதியத்தால் பெறப்பட்ட அனைத்துப் பணத்தொகைகளும்.


சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சி (ரூபா.மில்.)

ஆண்டு	2013	2014	2015	2016	2017	2018	2019
நிதிப் பெறுமதி	292	331	369	381	393	408	427
நிதியத்தின் வளர்ச்சி	58	39	38	12	12	15	19




லொத்தர் வருவாய் (ரூபா.மில்.)


ஆண்டு	2013	2014	2015	2016	2017	2018	2019
வருவாய்	63	59	62	65	46	52	60
வருவாய் வளர்ச்சி	14	-4	3	3	-19	6	8




நிதி / செயலாற்றுகை மீளாய்வு




	2015	2016	2017	2018	2019
லொத்தர் வருவாய்	62,609,140	65,101,330	46,038,539	51,766,720	60,221,340
நிலையான வைப்பு வட்டி	2,624,822	3,113,002	11,778,989	11,104,892	12,889,709
ஏனையவை	164,379	294,836	110,293	370,109	135,408



	2015	2016	2017	2018	2019
நிருவாகச் செலவுகள்	7,109,721	8,952,149	12,609,705	13,931,486	15,849,845
எதிர்பார்க்கப்பட்ட செலவுகள்	18,829,460	30,267,660	30,178,504	28,071,637	32,556,007



	2015	2016	2017	2018	2019
நடைமுறைச் சொத்து	335,080,431	334,144,880	420,048,160	417,604,915	439,140,324
நடைமுறையல்லா சொத்து	38,410,914	65,366,394	117,741,684	13,836,958	15,937,138



	2015	2016	2017	2018	2019
நடைமுறைப் பொறுப்பகள்	3,551,416	1,307,231	8,688,537	2,910,902	2,081,149
சிரட்டிய நிகி	369,939,929	398,204,043	411,359,622	428,530,971	452,996,323

சிரம வாசனா நிதியத்தின் சாதனைகள் -1998 - 2019

சிரம வாசனா நிதியமானது 1998 மாச் 31 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்ததுடன், பொது முகாமையாளர் மற்றும் மூன்று பதவியினருடன் முகாமை செய்யப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் பணி மிகவும் குறைந்த வசதிகளுடன் பல சிரமங்களுக்க மத்தியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.


2010 ஆம் ஆண்டிலிருந்து நிதியமானது, சந்தர்ப்பங்களுக்கு முன்னுரிமையளிப்பதிலும் பார்க்க நாடளாவியரீதியில் உள்ளடக்கி நிதியத்தின் சேவையை கையாளும் நோக்கில் அதனது பதவியினரை நிலையாக இற்றைப்படுத்தி, புதிய பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்து, நிதியத்துக்கான வளங்களைக் கொள்வனவுசெய்து, பணியாளர்களுக்கு பயிற்சிகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தி, அவற்றை இற்றைப்படுத்தி வந்துள்ளது. சிரம வாசனா நிதியத்தின் லொத்தர் சீட்டினை ஜாதிக சம்பத சனிக்கிழமை லொத்தருடன் இணைத்து லொத்தரை விரிவுபடுத்தியமை, லொத்தர் விற்பனையில் அதிகரிப்பு என்ற அதன் குறிக்கோளை அடைந்து நிதியத்தின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது.

நிதியத்தினையும், அதன் தொழிற்பாடுகளையும் பயனாளிகளை நோக்கி கொண்டு செல்வதற்கு மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் தொழில் பொறியியலாளர் அலுவல கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளதுடன், நிதியத்தின் பணி பற்றிய பதாதைகள் இலங்கையிலுள்ள அனைத்து தொழில் நியாயசபைகளிலும், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன். இது லொத்தர் விற்பனையில் அதிகரிப்புக்கு இட்டுச்சென்றுள்ளது.

நிதியத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப பணியாற்றுகின்ற அதேவேளை அதிக ஆக்கத் திறனுள்ள வகையில் சேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் ஒன்றான சிரம வாசனா நிதியத்துக்கு 2018 ஆம் ஆண்டில் முதலாவது ISO சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

பல பணி இலக்குகளை இலகுவாகவும், விரைவாகவும் ஆக்குவதற்கும், பயனாளிகளுக்கு தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்கும் கூட்டிணைந்த செயற்பாடுகளை விரிவுபடுத்தி, கணினிமயப்படுத்தப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி கணினி முறைமையில் அவர்களது கடமைகளை ஆற்றுவதற்கு அலுவலர்களை இயலச்செய்து சிரம வாசனா நிதியத்தில் கணினி அடிப்படையிலான வேலைச் சூழலொன்று நிறுவப்பட்டுள்ளது. இது.டிஜிற்ரல் பதிவு முறைமையைப் பயன்படுத்தி விரைவாக பயனாளிகளுக்கு தகவல்களையும் வழங்குகின்றது.

எதிர்வரும் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றுவதற்கும், நிதியத்தின் தொழிற்பாடுகளை பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் ஆற்றுவதனை இலக்காகக் கொண்டுள்ள எஸ்-5 எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிடப்படுகின்றது.



கணினி அடிப்படையிலான தகவல் முறைமை



TÜV NORD

CERTIFICATE

Management system as per
ISO 9001 : 2015

In accordance with TÜV NORD CERT procedures, it is hereby certified that

SHRAMA VASANA FUND
Ministry of Foreign Relations,
Skills Development & Employment and Labour Relations,
97, Jawatta, Colombo - 00500,
Sri Lanka

applies a management system in line with the above standard for the following scope

Provision of Resources for the Welfare of Sri Lankan Labour Force and their related Parties

Certificate Registration No.44 100 20392795
Audit Report No.2.5-9718/2020

Valid from 13.02.2020
Valid until 12.02.2023

Certification Body
at TÜV NORD CERT GmbH

Mumbai, 13.02.2020

This certification was conducted in accordance with the TÜV NORD CERT auditing and certification procedures and is subject to regular surveillance audits.

TÜV NORD CERT GmbH Langemarckstrasse 20 45141 Essen www.tuev-nord-cert.com

TÜV India Pvt. Ltd., 801, Raheja Plaza – 1, L.B.S. Marg, Ghatkopar (W), Mumbai - 400 086, India www.tuv-nord.com/in

IAF DAkkS

வழங்கிய ISO சர்வதேச தரச் சான்றிதழ்

எதிர்நோக்கவுள்ள சவால்களும் சிரம வாசன நிதியத்தின் பொறுப்புகளும்

அதிகளவிலான லொத்தர்கள் அதிக போட்டித்தன்மையுடய காரணத்தால் சிரம வாசனா நிதியத்திற்கான பிரதான வளமான "ஜாதிக சம்பத" லொத்தர், குறைந்தளவு "போட்டித் தன்மை" உடையதாக வந்திருந்ததுடன், இந்த லொத்தருடன் ஒப்பிடுமிடத்து பல்வேறுபட்ட ஏனைய அத்தகைய லொத்தர்கள் மூலம் வழங்கப்படுகின்ற முதல் பரிசுக்காக வழங்கப் பட்டுள்ள பணப் பெறுமதி அதிகளவாகும். இந்த நிலைமை நிதியத்தின் வளர்ச்சியை பாரியளவில் பாதிப்பதுடன், லொத்தரின் விற்பனையை அதிகரிப்பதற்காக விளம்பரப் படுத்தலையும், சந்தைப்படுத்தல் செயற்பாடுகளையும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. லொத்தர் சீட்டுக்களை வாடிக்கையாளர்கள் இணையம் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய இலகுவான முறையொன்றை வடிவமைப்பதற்கான கலந்துரையாடல் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. லொத்தர் வருமானத்தில் மட்டும் தங்கியிருக்காது எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவி மற்றும் மூலதனத்தின் மீது அவதானம் செலுத்தப்படும்.

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம், இந்த ஆண்டு காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டமிடலில் பிரச்சினைகளைக் குறைக்கும் வகையில், விசேடமாக பணியாளர்களில் தங்கியிருப்பவர்களும் பயனாளிகள் என்பதையும், பணியாளர்களின் குடும்பங்களை மேவும் வகையில் நிதியத்தின் வரப்பிரசாதங்களை வழங்குவதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தமையையும் உறுதிப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமாகத் திருத்தப்பட்டிருந்தது. இந்தத் திருத்தத்தினூடாக, சிரம வாசனா நிதியமானது லொத்தர் விற்பனையை ஊக்குவிப்பதற்கும், அதனை மேம்படுத்துவதற்கும் வலுவளிக்கப்பட்டிருந்தது.

சமூக மற்றும் சூழல்சார் பொறுப்புகள்

முற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் நாடளாவியரீதியில் ஆபத்துள்ள தொழிற்சாலைகளை இனங்காண்பதும் மற்றும் தொழில்சார் விபத்துக்களைக் குறைக்கின்ற அதேவேளையில், தொழிற்சாலைகளில் / நிறுவனங்களில் தொழில்சார் விபத்தில் ஆதரவற்றவர்களாகவுள்ள அல்லது இறந்த பணியாளர்களின் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இக்காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளாக தொழில்சார் விபத்துக்கள் குறைவடைந்துள்ளதுடன், தொழில்சார் இறப்புக்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், நிறுவனங்களில் ஆபத்து குறைவடையும் தன்மை வளர்ந்துசெல்லும் போக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தொற்றா நோய்கள் பற்றிய சுகாதார செயலமர்வினை நடத்துதல் மற்றும் பணியாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பணியாளர்களை ஊக்குவிப்பதன் காரணமாக, அவர்களின் சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு இயலுமாக இருந்திருக்கின்றதுதென்பது தொழில்தருநர் மற்றும் பணியாளர் ஆகிய இருதரப்பினதும் உரிய பின்னூட்டல் மாதிரிகளிலிருந்து தெளிவாகின்றது.

தேசிய மர நடுகை தினத்துடன் இணைந்ததாக "பூகோளம் வெப்பமடைவதை தடுப்பதற்கு மர நடுகையின் முக்கியத்துவம்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. சிரம வானா நிதியத்தின் அனைத்துப் பதவியினரும் வருகைதாரதொரு சூழலில் அதன் வளாகத்திற்குள் மர நடுகையை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

சிரம வாசனா நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய மீளாய்வு


சிரம வாசனா நிதியமானது, தனியார் துறை பணியாளர்களை உள்ளடக்கி உருவாக்கப் பட்டிருப்பதுடன், சுய வேலைவாய்ப்பில் ஈடுபடும் நபர்களை உள்ளடக்கியிருக்கவில்லை. சிரம வாசனா நிதியத்தின் நிதி இயலுமையைப் பொறுத்தே பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அதன் எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிதி இயலுமையில் அதிகரிப்பு ஏற்பட்டவுடன், அந்த எல்லைகளுக்கு அப்பால் மேலும் சேவைகளை விரிவுபடுத்துதல் ஆண்டு தோறும் இடம்பெறுகின்றது.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற அரசியல் ஸ்திரம், இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்தது, இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்குமிடையிலான உள் தொடர்புகள் விரிவடைந்தமை காரணமாக இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் அதிகரித்திருந்தன.

இதன் விளைவாக,, இலங்கையில் பல தொழிற்சாலைகள் இலங்கையில் திறக்கப்பட்டிருந்த துடன், அதன்விளைவாக பல மக்கள் தொழில் வாய்ப்புகள் வழங்காப்பட்டிருந்தன. அதன் காரணமாக தற்போதிருக்கின்ற தொழிற்றுறைகளின் விரிவாக்கமும், அதனூடாக இலங்கையின் துடிப்பான தொழிலணி 9 மில்லியனை அடைந்துள்ளது. சொல்லப்பட்ட அதிகரித்துள்ள தொழிலணியினை இலக்கு வைத்து, பணியாளர்களின் சேமநலனை அதிகரிக்கும் நோக்கில் சிரம வாசனா நிதியம், பல்வேறு குறிக்கோள்களுடன் வருடாந்தம் நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்து கொண்டிருக்கின்றது

எமது நாட்டில் 2019 ஏப்பிரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற (உயர்த்த ஞாயிறு) துரதிர்ஷ்டமான பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக லொத்தர் வருவாய் குறைவடைந் துள்ளதுடன், கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவற்றை அப்போதிருந்த பாதுகாப்பு நிலைமைக்கமைவாக தேவைப்பட்ட மட்டத்தில் மேற்கொள்வது சிரமமாக இருந்திருந்தது.

இருப்பினும், கௌரவ பணிப்பாளர்கள் சபையின் முன்மொழிவுகளின்படி திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களுக்குள் நிதியத்தின் செயற்பாடுகள் முழுமையாக மேற் கொள்ளப்பட்டிருந்தன.



சிரம வாசனா நிதியத்தால் வருடாந்தம் நடத்தப்பட்ட சில பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டுக்காக சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பல பிரதான வகைப்பாடுகளின் கீழ் வகைப்படுத்த முடியும்.

- விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் (தொழில்சார் விபத்துக்கள் மற்றும் ஏனையவற்றைக் குறைத்தல்.
- குறைந்த வருமானத்தை பெறுகின்ற உழைக்கும் குடும்பங்களின் உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- மருத்துவ முகாம்களை நடத்துதல் (கண் கிளினுக்குகள்).
- குறைந்த வருமானத்தை பெறுகின்ற உழைக்கும் குடும்பங்களிலுள்ள பிள்ளை களுக்கு மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல்.
- தொழில்சார் விபத்துக்கள் காரணமாக இறந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கு சிரம வாசனா புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- நியாயமற்ற வகையில் பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல்.
- தொழில்சார் நோய்களால் துன்பப்படுகின்ற பணியாளர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல்.
- பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- இதற்கு மேலதிகமாக, பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் கிரமமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு சிரம வாசனா நிதியத்தின் பதவியணிக்கு பணிக்கப்பட்டிருந்தது.

1. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

கண்ணோட்டம்

சிரம வாசனா நிதியம் தாபிக்கப்பட்டதன் பிரதான குறிக்கோள்களிலொன்று பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதாகும். இலங்கையில் பல தொழில் விபத்துக்கள் பணியாளர்களின் கவலையீனம் காரணமாகவும், பாதுகாப்பு உபகரணம் பயன்படுத்தாமை காரணமாகவும் ஏற்பட்டுள்ளமை கடந்த சில ஆண்டுகளாக தெளிவாகத் தெரியவந்துள்ளது.

இந்த காரணங்களுக்காக, முற்காப்பு நடவடிக்கையாக விபத்துக்கள் பற்றி அறிவிக்கப்படு கின்ற அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான நிலையிலுள்ள தொழிற்சாலைகள் அண்மைய ஆண்டுகளில் இனங்காணப்பட்டு, அது தொடர்பில் அறிவுள்ள பொறியியலாளர்களால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், பிரச்சினைக்குரிய நிலைமைகள் பற்றி பணியாளர்களுக்கும், தொழில்தருநர்களுக்கு மிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் இத்துறையிலுள்ள அனுபவம்வாய்ந்த வள ஆளர்களினூடாக நடத்தப்பட்டிருந்தன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றிருந்ததுடன், பணியாளர்களுக்கும், தொழில்தருநர் சமூகத்திற்கும் தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றியும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய, தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பற்றியும் அறிவூட்டப்பட்டிருந்தது.



(தகவலுக்கான பின்னிணைப்பு – பக்க இல.66 - இல.68)



சிரம வாசனா விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - 2019 சனவரி 29 - எமறெல்ட் (பிறைவேட்) லிமிடெட்




அதிக ஆபத்துள்ள அமுக்க இயந்திரங்களைப் பரிசோதிப்பது தொடர்பில் சான்றுப்படுத்தப்பட்ட அலுவலர்களுக்கான விழிப்பணர்வு நிகழ்ச்சித்திட்டம்

2. வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

கண்ணோட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பணியாளர்களின் குடும்பங்களை விசேடமாக, குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களை வலுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக் கின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்தையும் உள்ளடக்குவதற்கும், வகையில் ஒவ்வொரு வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து உழைக்கும் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்குமாக வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டுதோறும் நடைமுறைப் படுத்தப்படுவதுடன், அவர்களின் தெரிவின்பேரில் ஒரு துறையில் அல்லது அவர்களது பிரதேசத்திற்குப் பொருத்தமானதொரு துறையில் சுய தொழில்வாய்ப்புக்காக அவர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் சொல்லப்பட்ட தொழிற்றுறையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்.



(தகவலுக்கான பின்னிணைப்பு – பக்க இல.66 - இல.68)



வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - இறப்பர் அபிவிருத்தி பிராந்திய திணைக்கள அலுவலகம், கேகாலை



வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - பிரதேச செயலகம்,பதவியா



வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - உணவட்டுண வட்டகே – நாணல்புல் பயிற்சி நிலையம்


3. மருத்துவ முகாம்கள்

கண்ணோட்டம்

சுகாதாரமற்ற நிலைமை பற்றி இனங்காண்பதற்கும், தெரிவிப்பதற்குமாக பல சுகாதார வேலையமர்வுகள் பணியாளர்களுக்கு நடத்தப்பட்டிருந்தன. குறிப்பாக, பல வேலை யாளர்கள் குறித்த சுகாதார பிரச்சினைகளால் வருந்துவதாக உணரப்பட்ட, அவர்கள் பற்றிய சரியான புரிந்துணர்வு காணப்படாத இடங்களில் தொற்றா நோய்கள் பற்றிய மருத்துவ முகாம்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இது விசாரிக்கப்பட்டிருந்ததுடன், தேவைப்பாட்டின் அடிப்படையில் கிளினுக்குகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், தேவை யான ஆலோசனையும் வழங்கப்பட்டிருந்தது.

இதற்குமேலதிகமாக, கண் பரிசோதனைகளும் பணியாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருந்ததுடன், பார்வையில் குறைபாடுகள் உள்ள பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்கள் மருத்துவமனைகளிலுள்ள கண் கிளினிக்குக்கு அனுப்பப்பட்டிருக்கையில் ஏனையவர்களுக்குப் பொருத்தமான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதனூடாக பல பணியாளர்கள் அவர்களது கடமைகளை இலகுவாக ஆற்ற முடிந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், முன்கூட்டிய திட்டமிடலுக்கமைவாக வருடாந்தம் நாடாளாவியரீதியில் இலங்கை முழுவதிலும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.



(தகவலுக்கான பின்னிணைப்பு – பக்க இல.66 - இல.68)



கண் சிகிச்சை முகாம் - இண்டஸ்ரியல் பாக் - மிரிஜியாவில



கண் சிகிச்சை முகாம் - யாழ்ப்பாணம்

4. பாடசாலை உபகரணங்களை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம்


கண்ணோட்டம்

கல்வி கற்றுக்கொண்டிருக்கின்ற பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கல்விசார் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 02 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்றன.

இதன் கீழ், பாடசாலைப் பத்தகங்கள் குறைந்த வருமானம் பெறுகின்ற உழைக்கின்ற குடும்பங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதுடன், பொதுவாக குறைந்த வருமானம் பெறுகின்ற உழைக்கின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் பாடசாலைப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நோக்கத்திற்காக இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற உழைக்கின்ற குடும்பங்கள் தெரிவுசெய்யப்படுகின்றன. தகவல்கள், பிரதேச தொழில் அலவலகங்கள், பிரதேச செயலக வலயங்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள கல்வி அலுவலகங்களிலிருந்து பெறப்படுவதுடன், பாடசாலைப் பைகள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.



(தகவலுக்கான பின்னிணைப்பு – பக்க இல.66 - இல.68)



பாடசாலை உபகரண விநியோக நிகழ்ச்சித்திட்டம் - அம்பாறை மாவட்ட செயலகம்



பாடசாலை உபகரண விநியோக நிகழ்ச்சித்திட்டம் - லுணுகம்வெஹெர

5. விபத்தினால் மரணமடைந்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம்

கண்ணோட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களால் மரணமடைந்த அல்லது முழுமையாக அங்கவீனமடைந்த உழைக்கும் மக்களின் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பயனாளிகள், குறித்த தொழிற்சாலையில், வேலைத்தளத்தில் அல்லது சேவை நிலையத்தில் இடம்பெறுகின்ற தொழில்சார் விபத்து பற்றி தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்களினூடாகவும், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத் தினூடாகவும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இனங்காணப்படுவதுடன், மரணமடைந்த அல்லது முழுமையாக அங்கவீனமடைந்த உழைக்கும் மக்களின் பிள்ளைகள் (முற்பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி அல்லது உயர் கல்வி வரை, அதாவது 3-25 வயது வரை) இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகுதிவாய்ந்தவர்கள் என்பதடன், அத்தகைய பிள்ளைகளுக்கு 50,000/- நிலையான வைப்பும், கல்விசார் உபகரணங்களும் வழங்கப்படும்.



விபத்தினால் மரணமடைந்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்





விபத்தினால் மரணமடைந்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டமும் தானம் வழங்கும் வைபவமும்

6. பணியாளரின் சேமநல நிகழ்ச்சித்திட்டம்

கண்ணோட்டம்


ஆக்கத்திறனுள்ள திருப்திமிகு தொழிலணியொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் பணியாளர்களுக்கு தேவையான ஆதரவளிக்கும் சேவைகளை வழங்குதல். அதிக எண்ணிக்கையான பணியாளர்கள் அல்லது வசிப்பவர்கள் உள்ள ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் அல்லது முதலீட்டு வலயங்களை இலக்குவைத்து பணியாளர்களின் தேவைக்குரிய விளையாட்டு மைதானங்களை நவீனமயப்படுத் துதல், சுகாதார வசதிகளை தரமுயர்த்துதல், ஏனைய வசதிகளை வழங்குதல், தொழில் திணைக்களத்துடன் இணைந்து சமூக கலந்துரையாடல்களையும் வேலைத்தளக் கூட்டுறவுப் போட்டிகளை ஒழுங்கமைத்தல் போன்றவை இதில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.







வலைப்பந்து மைதான அங்குரார்ப்பணம் - 2019 பெப்ரவரி 22 .
பல்லேகலை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

பாலின அடிப்படையில் நிதிய பயனாளிகளின் தொகுப்பு







நிதிசார் தகவல்கள்

Shrama Vasana Fund 2

Shrama Vasana Fund
Statement of Financial Position
as at December 31st ,2019

		Rs. 2019	Rs. 2018
Assets			
Current Assets			
Cash and Cash Equivalents		3,802,821.01	1,731,446.25
Inventories	Note 04	858,552.69	2,439,264.83
Deposit in Postal Machine		-	13,535.00
Investment in Fixed Deposit		95,000,000.00	107,000,000.00
Receivables	Note 03	339,478,950.32	306,420,669.22
		439,140,324.02	417,604,915.30
Non-Current Assets			
Investment in ISO & Web site ,Web Base System		2,774,958.00	2,745,258.00
Intangible asset	Note 02	28,850.23	23,269.18
Plant Machinary & Equipment	Note 01	13,133,340.24	11,068,431.62
		15,937,148.47	13,836,958.80
Total Assets		455,077,472.49	431,441,874.10
Liabilities			
Current Liabilities			
Payables	Note 06	132,044.57	1,190,742.38
Provission	Note 07	1,949,104.00	1,720,160.00
Total liabitilies		2,081,148.57	2,910,902.38
Net Assets		452,996,323.92	428,530,971.72
Accumulated Surpuls	Note 05	452,996,323.92	428,530,971.72
Total net Assets		452,996,323.92	428,530,971.72

The Accounting Policies and notes on pages 06 to 11 from an integral part of this financial statement.The Board of Directors of an entity is responsible for the preparation and presentation of these Financial Statements in accordance with the Sri lanka public sector Accounting Standards(SLPSAs).These financial statements were approved by the Board of Directors and signed on their behalf.

Chairman	Director	General Manager	Accountant
D.M.S. Abayagunawardena	A.Wimalaweera	D.R.Jayalath	M.L.Jayamali
ShramaVasana Fund	ShramaVasana Fund	ShramaVasana Fund	ShramaVasana Fund

D. M. Sarath Abayagunawa
Secretary
Ministry of Skills Development
Employment & Labour Relations

A. WIMALAWEERA
Commissioner General of Labour
Department of Labour
Colombo 05

D. R. Jayalath
General Manager
Shrama Vasana Fund
Ministry of
Labour & Labour Relations

M. LAKMINI JAYAMAL
Accountant
Shrama Vasana Fund
Ministry of
Labour & Labour Relations

Shrama Vasana Fund 3

Shrama Vasana Fund
Statement of Financial Performance
As at December 31st ,2019

		Rs. 2019	Rs. 2018
Revenue			
Income	Note 09	73,246,457.89	63,241,723.15
Total Revenue		73,246,457.89	63,241,723.15
Expenses			
Administration Expences	Note 10	15,849,845.47	13,931,486.84
Depreciation	Note 11	1,983,224.05	2,000,515.06
Expenditure for objective of fund	Note 12	32,556,007.49	28,071,637.74
Other Expenditure	Note 13	1,024,642.02	-
		51,413,719.03	44,003,639.64
Surplus for the Year		21,832,738.86	19,238,083.51



Shrama Vasana Fund 4



Shrama Vasana Fund
Statement of Changes in Funds
For the Year Ended December 31, 2019

		Accumulated Fund	Total
Balance as at 31st December 2017		411,359,622.84	411,359,622.84
Prior year adjestment		(1,661,340.43)	(1,661,340.43)
Gratuity provission	14.4	(387,044.00)	(387,044.00)
Inquary salary and festival advance	14.5	(18,350.20)	(18,350.20)
Surplus for the year		19,238,083.51	19,238,083.51
Balance as at 31st December 2018		428,530,971.72	428,530,971.72
Prior year adjestment	Note 14	2,632,613.34	2,632,613.34
Surplus for the year		21,832,738.86	21,832,738.86
Balance as at 31st December 2019		**452,996,323.92**	**452,996,323.92**





Shrama Vasana Fund 5

Shrama Vasana Fund
Cash flow Statement
For the Year Ended December 31, 2019

	Rs. 2019	Rs. 2018
CASH FLOWS FROM OPERATING ACTIVITIES		
Surplus for the year	21,832,738.86	17,576,743.08
Adjustments		
Working capital adjustment Fixed deposit	2,692,741.10	-
EPF & ETF arrears	(585,673.10)	-
ETF surcharge	(95,489.28)	-
	23,844,317.58	-
Non-cash movements		
Depreciation	1,973,103.05	2,000,515.06
Amortisation	10,121.00	-
Revalue loss/Profit	-	(157,154.23)
Investment Interest	(12,889,709.06)	(11,104,892.32)
Distress Loan Interest	(51,460.44)	(34,996.90)
Repo investment interest	(70,178.39)	(110,766.23)
Other income	(13,770.00)	(224,347.70)
Increase/Decrease in working Capital		
(Increase)/Decrease of other payables	(1,058,697.81)	(1,591,621.07)
(Increase)/Decrease of Provission	228,944.00	(4,591,408.38)
(Increase)/Decrease of other receivables	(33,058,281.10)	(8,412,871.53)
(Increase)/Decrease in Inventories	1,580,712.14	981,112.10
Net cash flows from operating activities	(19,504,899.03)	(5,669,688.12)
CASH FLOWS FROM INVESTING ACTIVITIES		
Purchasing of Plant,Machinary & equipment	(739,938.00)	(1,323,300.00)
Investment Interest	10,196,967.96	11,104,892.32
Distress Loan Interest	51,460.44	34,996.90
Repo investment interest	70,178.39	110,766.23
Other income	13,770.00	224,347.70
Deposit Postal Machine & Insurance	13,535.00	307,203.94
Investment of Web Base & ISO	(29,700.00)	(685,000.00)
Research & Development	-	295,175.00
Software Development	-	549,000.00
Staff Trainning	-	225,490.00
Investment Fixed Deposit	12,000,000.00	(4,000,000.00)
Net cash flows from investing activities	21,576,273.79	6,843,572.09
Net increase/(decrease)in cash and cash equivalents	2,071,374.76	1,173,883.97
Cash and cash Equivalants at beginning of period	1,731,446.25	557,562.28
Cash and cash Equivalants at end of period	3,802,821.01	1,731,446.25

சிரம வாசனா நிதியம்
பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் குறிப்புகள்
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2019

01. பொதுவான தகவல்கள்

சிரம வாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தினாலும், 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தச்) சட்டத்தினாலும் கூட்டிணைக்கப்படுகின்றது.

சிரம வாசனா நிதியமானது, கொழும்பு-05, ஜாவத்தை வீதி, இல.97 இல் அமைந்துள்ளது.

பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, சிரம வாசனா நிதியத்தின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:

1. பணியாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போர்களை மேம்படுத்துவதன் கீழ் பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல். திருப்திமிகு, ஆக்கத்திறனுள்ள தொழிலணி ஒன்றை உருவாக்கும் குறிக்கோளுடன் உழைக்கும் மக்களுக்கு நிதிசார் மற்றும் பொருள்சார் உதவிகளை வழங்குதல்.

    - உழைக்கும் மக்களின் விழிப்புணர்வு, அவர்களின் குடும்ப உறுப்பினர்களை வலுப்படுத்துதல், உழைக்கும் குடும்பங்களின் சேமநலன் மற்றும் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளுக்கான ஏற்பாடு.

2. முன்னறிவித்தலின்றி நிறுவனங்கள் மூடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல். இதன் கீழ், தொழில்களை இழந்தவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கப்படுகின்றது.

3. அவசர நிலைமையின்போது பணியாளர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்பவர் களுக்கும் மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

    - மருத்துவ நிவாரணம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு மற்றும் செயற்கை உறுப்புகளை வழங்குதல்.

4. பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றபோது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்.

    - இதன் கீழ், சட்ட உதவித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் இந்தச் சட்ட உதவி மூன்று கட்டங்களின் கீழ் வழங்கப்படும்.

5. அனர்த்த நிலைமையின்போது பணியாளர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்பவர் களுக்கும் மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

    - தொழில் புரிகையில் ஏற்பட்ட விபத்தினால் இறந்தவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.

6. பணியாளர்களின் சேமநலனுக்காக சிறந்த சேவையை வழங்கியவர்களுக்கு பரிசில்களை வழங்குதல்.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

1. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 அறிக்கையிடும் அலகு

சிரம வாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தினாலும், 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தச்) சட்டத்தினாலும் கூட்டிணைக்கப்படுகின்றது.

1.2 வழங்குவதற்கு அதிகாரமளித்த திகதி

2020 பெப்ரவரி 21 ஆம் திகதி நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு பணிப்பாளர்கள் சபை அனுமதித்துள்ளது.

1.3 அறிக்கையிடும் காலப்பகுதி

சிரம வாசனா நிதியத்தின் நிதிசார் காலப்பகுதி 2019 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 12 மாத காலப்பகுதியை பிரதிபலிக்கின்றது.

1.4 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

1.4.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கப்பாடு

நிறுவனத்தின் நிதிக்கூற்றானது நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (SLPSAS) அமைவாக இக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.4.2 அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கணக்குகளைப் பாதிக்கின்ற பணவீக்கக் காரணிகள் கணிக்கப்பட்டிருக்கவில்லை

1.4.3 ஒப்பிட்டுத் தகவல்

நிதிக்கூற்றுக்களிலுள்ள அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பெறுமதிகளும் முன்னைய ஆண்டின்படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது ஆகையால், தரமான, விபரமான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுத் தகல்கள் புரிந்துகொள்ளக்கூடியவை என்பதுடன் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடத்தக்கவை.

ஒப்பீட்டு இலக்கங்கள் தேவையானபோது நடப்பு ஆண்டின் சமர்ப்பிப்பினை உறுதிப்படுத்துவதற்காக மீளாயப்பட்டுள்ளன.

1.4.4 தொழிற்பாட்டிலிருக்கின்ற, கையாளப்படுகின்ற நாணயம்

நிதிக்கூற்றானது சிரம வாசனா நிதியத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.4.5 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

தீர்ப்புகள், முடிபுகள் மற்றும் ஊகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் நிச்சயமற்ற தன்மை காரணமாக, எதிர்கால காலப்பகுதிக்கு முன்கொண்டு செல்லவுள்ள மீதியில் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டித் தேவைப்படலாம்.

பின்வருகின்ற தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள், சிரம வாசனா நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கின்ற செயன்முறையில் நிதிக்கூற்றுகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளன என்று முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கைக்கால்

சொத்தொன்றின் பயனுறுதிவாய்ந்த வாழ்நாள், பெறுமானத்தேய்வின் முறைமையியல் ஆகியன சிறந்த மதிப்பீட்டின் அடிப்படையில் முகாமைத்தவத்தால் தீர்மானிக்கப் படுகின்றது. ஆகையால் அவை நிச்சயமற்றமற்றவை.

ஆ) தொடர்ச்சியான இருப்பு

சில மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகள் என்பதுடன், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் சபையால் தொடர்ச்சியாக தொழிற்படுத்தப்படுகின்ற நிதியமானது, சிரம வாசனா நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பில் குறிப்பிடத்தக் எதுவித இடருக்குள்ளாகும் வாய்ப்பும் இனங்காணப் பட்டிருக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் நிலையானதன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதுடன், கணக்கீட்டுக்கொள்கைகள் காலப்பகுதி முழுவதும் பயனுள்ளதாக இருக்கின்றது.

1.5 சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீட்டு அடிப்படை

1.5.1 சொத்துக்கள், பொறித்தொகுதியும் உபகரணங்களும்

அ) இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நிறுவகத்தின் எதிர்கால பொருளாதார நன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளதா அல்லது அதன் செலவு ஆதனம் மற்றும் உபகரணம் பற்றிய அரச துறை கணக்கீட்டு நியமங்கள் இல.07 இற்கமைவாக நம்பிக்கையாக அளவிடப்படக்கூடியதா என்பதுவும், அவற்றின் பெறுமானத்தேய்வினை மற்றும் பெறுமானத்தேய்வினையும், தொடர்புடைய சேதங்களையும் மதிப்பிடுதல், அவற்றின் இயலளவினை தீர்மானித்தலும் தேய்மானமிடுதலும், அவற்றுடன் தொடர்புபட்ட சேதங்கள் ஆகியன இனங்காணப்படுகின்றன.

ஆரம்ப நிலையில், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் அதனது செலவில் மதிப்பிடப்படுகின்றன.

ஆ) செலவு

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவு ஆகியன, கொள்வனவுச் செலவு, உத்தேசிக்கப்பட்டுள்ள அதனது பயன்பாட்டுக்கு மற்றும் செயலாற்றும் மட்டம் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய ஏதேனும் செலவு என்பற்றை உள்ளடக்ககின்றது.

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத்தேய்வினைக் கழித்ததன் பின்னரான செலவு காட்டப்படுகின்றது.

பரிசுகளாகப் பெறப்பட்டுள்ள சொத்தக்கள் திரட்டிய நிதியத்துக்கு வரவுவைக்கப் படுவதுடன், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) மீண்டெழும் செலவு

சொத்துக்களைப் பராமரிப்பதற்கு அல்லது உழைக்கும் இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் நிலையான சொத்துக்களை பெறுதல், விரிவுபடுத்துதல் அல்லது அதிகரிக்கும் நோக்கத்தக்காக உறப்பட்ட தொடர்ச்சியான செலவீனங்கள் மூலதனச் செலவீனமாகக் கருதப்படுகின்றன.

ஈ) பெறுமானத்தேய்வு

காணி தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்பட்டபோது, ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணப் பொருட்கள் ஒவ்வொரு பிரிவின் வாழ்க்கைக்காலம் மீது எளிய நேரியல் முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. சொத்து பயன்படுத்தப்படுகின்ற நேரத்திலிருந்து அது அகற்றப்படும் திகதி வரை பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது

பின்வருகின்ற பெறுமானத் தேய்வு வீதங்களில் பெறுமானத் தேய்மானம் தயாரிக்கப்படுகின்றது.

வாகனங்கள்	10%
பொறித்தொகுதி	20%
காற்றுச்சீராக்கி	20%
செவிப்புல-கட்புல உபகரணம்	25%
கணனிகள்	25%
தளபாடங்களும் பொருத்துக்களும்	10%
அலுவலக உபகரணங்கள்	07.5%
மென்பொருட்கள்	20%

உ) தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

தொட்டுணரமுடியாத சொத்துக்கள் பணப் பெறுமதியுடனான பௌதிகச் சொத்துக்கள் அல்லாதவையாகும்.

ஊ) இனங்காண்பதன் அடிப்படை

பௌதீக சொத்துக்கள் அல்லாதவை, சொத்தொன்றின் செலவு மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ள பொருளாதார நன்மை அலுவல்களுக்குள் அந்த சொத்துக்களின் ஓட்டத்திலும் பார்க்க அதிகளவு நம்பகமாக மதிப்பிடத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது.

- கணக்கீட்டு மென்பொருள்

நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் பெறுகைச் செலவை அளவிடுவதுடன், செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத் தேய்வினைக் கழிக்கின்றது.

எ) தொட்டுணரமுடியாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

சொத்தின் பயன்பாட்டுத் திகதியிலிருந்து இலகுவான வழியொன்றில் ஆக்கத்திறன் வாழ்க்கைக்காலம் மீது சொத்தினைப் படிப்படியாக பெறுமானத்தேய்விட்டு வருமானக் கூற்றுக்கு சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஏ) சொத்து மீள்மதிப்பீடு

வாகனம் தவிர்ந்த அனைத்து ஆதனம்,பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது மீள்மதிப்பீடானது, அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட தொழில்சார்தகுதியுள்ள ஆட்களின் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.(இ.அ.து.க.நி 07)

நிதியத்துக்கு கையளிக்கப்பட்ட KO 7519 என்ற இலக்கத்தையுடைய கார் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து புதிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளும் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப் படுகின்றன.

i). அகற்றுதல்

ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது தற்போதைய மதிப்பு, அவை விற்கப்படுகின்றபோது அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களுக்கு வழங்கப்படாதபோது அவற்றை அகற்றுவதற்கு இனங்காணப்படுகின்றது. மூலதனப் பொருட்களை அகற்றுகின்றபோது, இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (இ.அ.து.க.நி 07) கணக்கிடப்படுகின்றது.

1.5.2 பங்கு

பங்கானது செலவின் அல்லது தேறிய பெறுகை மதிப்பின்படி தெரிவிக்கப்படுகின்றது. பங்கு எடையின் சராசரி விலையில் உத்தரவாதம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.5.3 பெறக்கூடிய கணக்குகள்

பெறக்கூடிய கணக்குகள் என்பவை சேகரிக்கப்படமுடியாத அனைத்து பெறுமதிகளுக்குமான அனைத்து விலைப்பட்டியலின் மதிப்பாகும்.

அ)திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறக்கூடிய பணம்

சிரம வசனா நிதிய வருமானத்தின் பிரதான மூலம் 10% “ஜாதிக சம்பத” லொத்தரிலிருந்து பெறப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் பெறக்கூடிய லொத்தர் வருமானம், லொத்தர் சபையால் திரட்டிய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுகின்றது என்பதுடன், நிதியத்தின் வருடாந்த தேவைப்பாடுகளின்படி காலாண்டுக்கொருமுறை விநியோகிக்கப்படுகின்றது.

இது, திரட்டிய நிதியத்தில் சிரம வாசனா நிதியம் என்ற பெயரில் நிதியம் பெறவுள்ள தொகையைப் பிரதிபலிக்கின்றது.

ஆ) நிலையான வைப்பு பணப் பெறுகைகள்

சிரம வாசனா நிதியம் என்ற பெயரின் கீழ் நான்கு அரச வங்கிகளில் பேணப்படுகின்ற நிலையான வைப்புக்கள், ஆண்டுக்காக பெறப்பட்டிருக்க வேண்டிய பணமாகும், இருப்பினும் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

15.4 முதலீடுகள்

முதலீடுகள், ஒரு வருடத்திற்கு குறைவான குறுகிய கால முதலீடுகளையும் ஒரு வருடத்திற்கும் அதிகமான நீண்ட கால முதலீடுகளையும் கொண்டுள்ளது. இது. நிலையான வைப்புகளில், மூன்று மாதம், ஆறு மாதம் மற்றும் ஒரு வருடத்திற்கு குறுகிய கால முதலீடுகளையும், அதேபோன்று நீண்ட கால முதலீடுகள் சிரம வாசனா நிதியத்தின் இணையத்தளத்திலும், கணனிமயப்படுத்துள்ள தரவுத்தளத்திலும் மற்றும் சான்றுப்படுத்துதலிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது.

1.5.5 பணமும் பணத்திற்கு சமனானவையும்

கையிலுள்ள மற்றும் வங்கி வைப்பிலுள்ள பணமும் பணத்திற்குச் சமனானவையையும் கொண்டிருக்கின்றது.

1.6 பொறுப்புக்களும் ஒதுக்கங்களும்

ஐந்தொகை தயாரிக்கப்படுவதற்கான அனைத்து வகையான பொறுப்புகளும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஐந்தொகையில் காணப்படுகின்ற பொறுப்பு களுக்கு போதுமானளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் சரியாக மதிப்பிடப்படமுடியவில்லை.

நிதிக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்த ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டி கட்டாயப்படுத்தப்படுகின்ற பொறுப்புகள் நிதிக்கூற்றின் கீழ் நடைமுறைப் பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன. நிதிக்கூற்றுத் திகதியின் பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புகள் நடைமுறையல்லாத பொறுப்புகளாக பேணப்படுகின்றன.

1.6.1 ஓய்வூதிய உதவிப் பொறுப்புகள் மற்றும் எற்பாடுகள்

அ) பணிக்கொடை உதவித் திட்டத்தை வரையறுத்தல்

1983 ஆம் அண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, சிரம வாசனா நிதியம் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தது. கணக்கிடப்பட்ட ஒதுக்கங்கள் நிதிக்கூற்றில் காட்டப்படுகின்றன

ஆ) உதவுதொகைத் திட்டத்துக்கான வரைவிலக்கணம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஊழியர் சேமலாப நிதி உதவுதொகைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு உதவுதொகைகள் செலுத்துவதற்கு தகுதியுள்ள அனைத்து பணியாளர்களும், ஏற்புடைய கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக உரிய உதவுதொகை நிதியங்களால் உள்ளடக்கப்படுகின்றன.

பணியாளரின் மொத்த சம்பளத்திலிருந்து 12% ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நிதியம் பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புச்செய்கின்றது.

இ) சட்ட உதவிக்கான ஒதுக்கீடு

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களிலொன்று, முதலாவது சட்ட உதவி வழக்கு விசாரிக்கப்படுகின்ற போது வழங்கப்படுகையில், இரண்டாவது தவணை வழக்குக் கட்டளை பெறப்பட்டதன் பேரில் செலுத்தப்படுவதாகும். வழக்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த ஒதுக்கங்கள் ஆண்டு காலப்பகுதியில் இறுதி வடிவத்தை எடுக்கவில்லை.

1.7 இடைநேர் செலவுகள்

தொழில் நியாயசபையின் வழக்கு.

சிரம வாசனா நிதியத்தின் முன்னாள் பணியாளர்கள் இருவர் தொழில் நியாய சபையில் 02/788 மற்றும் 789 ஆம் இலக்கங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

1.8 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

1.8.1 வருமானம் / வருவாய்

பொருளாதார நலன்கள் அல்லது சேவை சாத்தியப்பாட்டின் மொத்த வெளியேற்ற மானது, அறிக்கையிடும் காலப்பகுதியில் வரவுகள் அல்லது நிகரச் சொத்துக்கள் நிறை ஆகியவற்றின் தன்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் வழிவருகின்ற பெறுபேறா கின்றது. வருமானம் மற்றும் வட்டி வருமானம் திரட்டல் அடிப்படையில் கணக்கிடப்படு வதுடன், 'ஜாதிக சம்பத' லொத்தர் மூலமான வருமானம், நிலையான வைப்பிலிருந்தான வட்டி வருமானம் என்பவை பிரதான வருமானங்களாகும்.

1.8.2 செலவினம்

பண ஓட்டங்களின் தன்மை அல்லது சொத்துக்களின் நுகர்வின் தன்மை அல்லது பொறுப்புக்களின் தன்மை காரணமாக அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியில் பொருளாதார நன்மைகளில் அல்லது சேவை நம்பகத்தன்மையில் வீழ்ச்சி.

சிரம வாசனா நிதியத்தின் பணியானது, நிதியத்தின் குறிக்கோள்களைப் பேணுவதில் மற்றும் அதனது மூலதன சொத்துக்களைப் பராமரிப்பதில் மூலதனத்தின் தன்மை மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பங்கிலாபங்கள் பற்றியதாகும்.

1.9 ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிலான நிகழ்வுகள் இடம்பெற்றதைக் கவனத்தில்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.10 பண ஓட்டக்கூற்று

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (SLPSAS 2) "நேரடியற்ற முறைமை" என்பதைப் பயன்படுத்தி பண ஓட்டக்கூற்று திருத்தப்படுகின்றது.

Shrama Vasana Fund 7

Note 01
Plant machinary & Equipment
01-1

Cost	Restated balance as at 01.01.2019	Additions	Transfer /Acquistions	Disposal/write off/Adjestment	Balance as at 31.12.2019
Vechicle	9,382,500.00		3,500,000.00	-	12,882,500.00
Machinary & Equipment	512,380.00	-	-	411,330.00	101,050.00
Audio & Video Visual	694,384.00	-	-	479,584.00	214,800.00
Air Conditioners	1,279,824.99	-	-	1,099,824.99	180,000.00
Computers	2,655,797.50	721,825.50	-	1,429,097.50	1,948,525.50
Furniture and Fittings	1,527,445.87	-	125,500.00	1,023,445.87	629,500.00
Office Equipment	337,225.57	18,112.50	-	208,225.57	147,112.50
	16,389,557.93	739,938.00	3,625,500.00	4,651,507.93	16,103,488.00

01-02

Depreciation	Restated balance as at 01.01.2019	Charge for the period	Disposal/write off/Adjestment	Balance as at 31.12.2019
Vechicle	1,831,160.00	1,016,880.14	-	2,848,040.14
Machinary & Equipment	309,490.65	63,121.78	368,736.53	3,875.90
Audio & Video Visual	209,470.25	140,065.23	339,236.85	10,298.63
Air Conditioners	1,255,925.19	31,326.32	1,280,347.40	6,904.11
Computers	966,387.32	565,574.42	1,445,181.77	86,779.97
Furniture and Fittings	589,122.00	133,772.49	710,821.89	12,072.60
Office Equipment	159,570.90	22,362.67	179,757.16	2,176.41
	5,321,126.31	1,973,103.05	4,324,081.60	2,970,147.76

Note 02

Intangible Asset	Cost as at 01.01.2019	Additions	Disposal/write off/Adjestment	Balance as at 31.12.2019
Soft Ware	55,500.00		25,500.00	30,000.00
	55,500.00	-	25,500.00	30,000.00

Amortisation	as at 01.12.2019	Charge for the period	Disposal/write off/Adjestment	Balance as at 31.12.2019
Soft Ware	32,230.82	10,121.00	41,202.05	1,149.77
	32,230.82	10,121.00	41,202.05	1,149.77

Note 03
Other Receivables

Treasary Operation Department	332,106,120.18
Festival Advance	8,750.00
Distress Loan	1,169,250.00
Interest on Fixed Deposit Investmen	6,191,830.14
Refundable deposit	3,000.00
	339,478,950.32

Shrama Vasana Fund 8

Note 04
Inventories

Stationary	435,343.01
Programe Item	423,209.68
	858,552.69

Inventories has been measurement on Weighted Average Cost

Note 05

Cumulative Fund as at 01.01.2019	431,163,585.06
Surplus for the year 2019	21,832,738.86
Cumulative Fund as at 31.12.2019	452,996,323.92

Note 06
Other payable

Welfare programe payable	31,700.00
Telephone Payable	26,271.17
Other Payable	18,470.00
water & electricity Payable	2,840.04
Over Time Payble	52,763.36
	132,044.57

Note 07
Provission

Provision for Legal Aid	455,000.00
Provission Financial assistance Arbit	10,000.00
Provission Legal Assistance appeals	100,000.00
Staff Gratuity Provission	1,151,604.00
Provision for web base system	32,500.00
Provission for Audit Fee	200,000.00
	1,949,104.00

Note 08
Fixed Assets has been depreciated on Straight line basis
Following Rates are used.

Vehicle	10%
Machinary & Equipment	20%
Air Conditioners	20%
Audio & Video Visual	25%
Computers	25%
Furniture and Fittings	10%
Office Equipment	7.5%
Soft ware	20%

Depreciable value of final assets have been depreciated up to scrap value Rs.1

Note 09
Income

Shrama vasana Lottery Income	60,221,340.00
Fixed Deposit Investment Income	12,889,709.06
Distress Loan Interest Income	51,460.44
Repo Investment Income	70,178.39
Other Income	13,770.00
	73,246,457.89



Shrama Vasana Fund 9



Note 10
Administrative Expenditure

Salary & wages	5,590,332.81
E.P.F.	1,544,266.80
E.T.F.	231,634.02
Cost of Living Allowance	1,425,765.00
Other Allowance	224,140.00
Chairman Allowance	230,403.21
Practical trainee Allowance	206,000.00
Directors Allowance	547,400.00
Board Secreatary Allowance	24,000.00
Allowance for Internal Auditor	38,806.00
Professional Allowance	132,000.00
Bonus	412,369.00
Staff Gratuity	156,444.00
Overtime & Holiday pay	807,221.02
Domestic Travelling & Sub	139,703.00
Transport Charges	78,124.00
Fuel	40,153.00
Stationery & Others	797,498.66
Postal Expenses	32,810.04
Telephone Expenses	305,014.00
Entertainment Expenses	43,949.00
Refreshment & Other	199,521.78
Sundry	7,744.32
Others	156,421.65
Audit Expenses	200,000.00
Water & Electricity	70,793.96
Other Service	492,276.74
Maintance & Repair expence	760,335.73
Staff Welfare	175,000.00
Training of Staff	779,717.73
	15,849,845.47

Note 11
Depreciation

Depreciation on Vehicle	1,016,880.14
Depreciation on Computers	565,574.42
Depreciation on Air Conditioners	31,326.32
Depreciation on Audio & Video Visu:	140,065.23
Depreciation on Furniture and Fittin	133,772.49
Depreciation on Office Equipment	22,362.67
Depreciation on Machinary & Equipı	63,121.78
Amortisation on Soft ware	10,121.00
	1,983,224.05





Shrama Vasana Fund 10

Note 12
Expenditure to achive targets of the fund

Health camp Programme	9,433,841.18
Empowerment programme	4,751,765.35
Awarness Programme	1,113,159.00
Welfare programme	9,234,460.45
Artificial Legs & Limbs Programe	46,500.00
Technical education programme	11,600.00
Medical Assistance Programme	550,000.00
Legal Aid Programme	580,000.00
Legal assistance for appeals	320,000.00
Financial assistance for arbitration	30,000.00
Legal aid Scholership for children	45,189.20
Scholarship programme	6,439,492.31
	32,556,007.49

Note 13
Other Expenditure

Lottery Sale Public Awarness	954,642.02
Iso review	70,000.00
	1,024,642.02

Note 14
Prior year adjustment

EPF & ETF arrears	(585,673.10)
Assets sales loss	(5,376.00)
ETF surcharge	(95,489.28)
Acquistions of vehicle KO 7519	3,500,000.00
Asset Revalue loss	(306,348.28)
Acquistions furniture	125,500.00
	2,632,613.34

14.1
EPF & ETF Arrears and Surcharge
ETF & ETF has calculated on Basic salary of not considering for the cost of living allowance since 2005 to 2016 have been adjusted EPF & ETF Arrears and surcharge.

14.2
Acquistions vehicle Ko 7519
Ministry of Labour has trasfer Ko 7519 to the shrama vasna Fund Vehicle No.Ko 7519 Yaris has been valued by Department of Government Valuation.

Acquistions Furniture
Transferred furniture from ministry of labour ,Adjusted fair market Value.

14.3
Revaluation of Fixed Assets
Revaluation Fixed Assets & Intangible assets on 22.10.2019

14.4
Gratuity provission
Gratuvity has calculated on basic salary of not considering for cost of living Allowance for 2018 have been adj

14.5
Inquary salary and festival advance
The board of directors of Shrama Vasna fund has decided to Allocated all the dues after the festival advance

Note 15
Case in labour Tribunal
Two Former employess of shrama vasana fund have file a case in labour Tribunal No.02/788.789/2018

Note 16
Comparative Information
Prior years figures have been restated where necessary to confirm to the current year's presentation.

Note 17
Directors Interests in Contracts
No Director of the Board has any material direct or indirect interest in the contracts of the Board.

Note 18
Directors Responsibility
The Directors take responsibility for the Preparation and Presentation of Financial Statements.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. : டுநுறு/யு/ளுஏகு/2.்.2019.்.2

திகதி : 28 ஓகஸ்ட் 2020

தவிசாளர்
சிரம வாசனா நிதியம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு நியதிகளின்படி, 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகுதியுள்ள கருத்துரைகள

2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்குரிய சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுஇ 2019 திசெம்பர் 31 இலுள்ளவாறான விரிவான நிதிச் செயலாற்றுகைக் கூற்றினைத் தொகுத்திருப்புடன், நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைத்துவ மாற்றக் கூற்று, நிதி ஓட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கையின் பொழிப்பு உள்ளடங்கலாக முடிவுற்ற அந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக் குறிப்புகள், 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. எனது அறிக்கை, அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி உரிய நேரத்தில் பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள், 2019 டிசெம்பர் 31 இல் நிதியத்தின் நிதி நிலைமை உண்மையான, நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பதுடன், அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றுகைகள் மற்றும் பண ஓட்டம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியதிகளின்படியானது என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

1.2 தகுதியுள்ள கருத்துரைகளுக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 53 ஆம் பிரிவு நியதிகளில் 306இ348 ரூபா மீள்மதிப்பீட்டு நட்டம், சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ததன் விளைவாக ஆய்வாண்வாண்டில் ஏற்பட்டமை மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் குறிப்பிடப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாறு குறிப்பிடாது, முன்னைய ஆண்டு சீராக்கங்களாக திரட்டிய நிதியத்தால் சீராக்கப்பட்டுள்ள வருடாந்த மேலதிகம் அந்தத் தொகையினால் மேலதிகமாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 7 இன் நியதிகளின்படி,நிலையான சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்க்கைக்காலம் வருடாந்தம் மீளாயப்பட வில்லை. ஆகையால், ஆய்வாண்டு காலத்தின் இறுதியில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட நிலையான சொத்துச் செலவு 430இ420 ரூபா தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு நியதி 3 இன் நியதிகளில் மதிப்பிடப்பட்ட தவறை மீளாய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் நிதியத்துக்கு மாற்றப்பட்ட 3இ500இ000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம், தொழில் திணைக்களத்தால் நிதியத்தக்கு உரித்தளிக் கப்பட்ட 125இ500 ரூபா பெறுமதியான மரத் தளபாடங்களும் உபகரணங்களும் மூலதன மானியங்களாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டு சீராக்கங்களாக திரட்டிய இலாபத்தில் சீராக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஆய்வாண்டின் பண ஓட்டத்தில் தொழிற்படு செயற்பாடுகளின் கீழ் செயலுறு மூலதனச் சீராக்கங்களாக 2இ692இ741 ரூபா நிலையான வைப்பின் பெறுமதி கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எனது கணக்காய்வினை நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நடத்தியுள்ளேன். ஆந்த நியமங்களுக்குக் கீழ் எனது பொறுப்பகள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுப் பிரிவுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பில் மேலும் விதித்துரைக்கப்பட்டுள்ளன.நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச்

1.3 முகாமைத்துவத்தின் பொறுப்பும் நிதிக்கூற்றுக்களுக்கான ஆளுகையுடன் அறவிடப்பட்டவையும்

இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக உண்மையை, நியாயத்தை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பினை முகாமைத்துவம் கொண்டிருக்கின்றது என்பதுடன், முகாமைத்துவம் என்ற வகையில், அத்தகைய அகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறுகளற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலச்செய்வதும் அத்தியவசியமானதாகும்.

நிதிக்கூற்றக்களைத் தயாரிக்கின்றபோது, நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கான இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பென்பதுடன், கணக்குகளை முறையாகப் பேணி, முகாமைத்துவம் எப்போது நிறுவகத்தின் திரவத்தன்மையை தீர்மானிப்பது அல்லது வேறு மாற்று வழியில்லாதபோது நிறுவகத்தின் செயற்பாடுகளை நிறுத்துவது என்பவை தவிர்ந்த நிறுவகத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துத்தின் பொறுப்பேயாகும்.

அளும் தரப்புக்கள், நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை யிடுவதற்கு பொறுப்பு வாய்ந்தவையாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உட்பிரிவின்படி, நிதியம், அதன் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அதன் வருவாய், சொவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தத்தில், எனது குறிக்கோள், இந்த நிதிக்கூற்றுக்கள், பொருட்படுத்தக்கூடிய மோசடி, தவறுகளை கொண்டிருக்கக்கூடிய பொருட்படுத்தத்தக்க பிழைகள் அற்றவை என்ற நியாயமான உத்தரவாதத்தை முன்வைப்பதும், எனது கருத்துடன்கூடிய கணக்காய்வு அறிக்கையொன்றினை வழங்குவதுமாகும். இந்த நியாயமான உத்தரவாதம் உயர்ந்த பட்சமானதாக இருக்கின்றபோதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவான கணக்காய்வொன்றினை மேற்கொள்கின்றபோது பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களை அது எப்போதும் வெளிப்படுத்தும் என்ற உத்தரவாதமாகாது. பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்கள் என்பது, தனித்த அல்லது கூட்டான மோசடி மற்றும் தவறுகளின் பாதிப்புகளால் ஏற்படுத்தப்பட முடியும்

என்பதுடன், இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக, தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் இணக்கப்பாட்டுடன் நான் இந்தக் கணக்காய்வினை மேற் கொண்டுள்ளேன். மேலும்,

- எனது கருத்து, மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காண்கின்ற மற்றும் மதிப்பிடுகின்ற போது, சூழ்நிலைக்குப் பொருந்தத் தக்க உரிய கணக்காய்வு நடைமுறைகளைப் பயன்படுத்தி மோசடிகள் மற்றும் பிழைகளினால் ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்ப்பதற்கு போதிய, உரிய கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதன் அடிப்படையிலமைந்ததாகும். மோசடியின் தாக்கம் பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றொன்றினால் ஏற்படுகின்ற ஆபத்திலும் பார்க்க பலமானதாகும் என்பதுடன், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது அகக் கட்டுப்பாட்டினைத் தவிர்த்தல் என்பவை தவறான நடத்தை மற்றும் மோசடி, இட்டுச்செல்கின்றன.

- நிறுவனத்தின் அகக் கட்டுப்பாடு, சூழ்நிழலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைமுறைகளை வடிவமைப்பதற்கு பெறப்பட்டுள்ளமை தொடர்பில் புரிந்துணர் வொன்று இருந்தபோதிலும், அகக்கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் உத்தேசமில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை அத்துடன் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட உரிய வெளிப்படுத்தல்களின் பொருத்தமாந்தன்மையை மதிப்பிடுதல்.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிறுவகத்தின் இருப்பு பற்றி போதிய நிச்சயமின்மை உள்ளது என்ற கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுள்ளதன் அடிப்படையில், நிறுவனம் தொடர்ந்து கணக்கெடுக்க வேண்டுமென்ற அடிப்படையைப் பயன்படுத்துவது குறித்து முடிபெடுக்கப் பட்டுள்ளது. அடிப்படையாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடு பொருட்படுத் தத்தக்க நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதென்று நான் முடிவுறுத்தினால், அவை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவை தொடர்பில் எனது அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்பாடுகள் போதுமானவை

யில்லையென்றால், எனது கருத்துரை திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு எதிர்கால சம்பவங்கள் அல்லது காரணிகள் காரணமாக முடிவுற முடியும்.

- முன்வைப்பு கட்டமைப்பு முறையை மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்டிருக் கின்ற நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அத்துடன் நிகழ்வுகள் அவை நிதிக்கூற்றுக்களில் உரிய முறையிலும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

முக்கியமான கணக்காய்வு காண்பிப்புகள், பிரதான அகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட ஏனைய விடயங்கள் ஆளும் தரப்பினர் களுக்கு புரிந்துகொள்ளச் செய்யப்பட்டுள்ளன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், பின்வருகின்ற தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையின் பகுதியான தகுதியுள்ள கருத்துரைகளுக்கு என்ற அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் விபரங்களையும் நான் பெற்றுள்ளதுடன், எனது விசாரணையில் பார்த்தவாறு நிறுவகம் உரிய பதிவுகளைப் பேணியுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ன) (மை) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தால் அனுப்பப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்ததாக இருந்தது.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறைகள், பெறப்பட்ட சான்றுகளுடன் மற்றும் பொருட்படுத்தத் தக்க விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட வரையறைக்குள் பின்வருகின்ற கூற்றுக்களைத் தெரிவிப்பதைத் தவிர வேறு எதுவும் எனது அவதானத்திற்கு வரவில்லை:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின்படி, நிறுவகத்தின் ஆளுங் குழுவின் உறுப்பினர் எவரேனும், நேரடியாக அல்லது நிறுவகத்தின் ஏதேனும் ஒப்பந்தத்துடன் அல்லது தொழிலின் சாதாரண அலுவல்கள் என்ற நிலைக்கு அப்பால் நடந்து கொள்வதில் தொடர்புபட்டுள்ளனர்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின்படி, நிறுவகத்தின் ஆளும் சபையினால் வழங்கப்பட்ட ஏற்புடையதான உரிய எழுத்துருவிலான சட்டம் அல்லது பிற வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காது நிறுவகம் செயற்பட்டுள்ளது.

சட்டங்கள்,ஒழுங்குகள், ஒழுங்குவிதிகளுடன் தொடர்புபட்டவை		**விளக்கம்**
(அ) 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டல் (ஞ) வழிகாட்டல்	7.9.9	565இ405 ரூபாவுக்கு 03 கணினிகளைக் கொள்வனவு செய்ததில்,குறைந்த விலைமனு சமர்ப்பித்த மனுதாரரை நிராகரித்து தொழில் நுட்ப விடயங்களுடன் தொடர்புபட்ட மனுதார ரிடமிருந்து வாய்மூல தெளிவுபடுத்தலைகளை நிதியம் பெற்றுள்ளது. இருப்பினும், வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனுதாரரிடமிருந்து எழுத்தில் தெளிவுபடுத்தல கோரப்பட்டிருக்கவில்லை
(ணை) வழிகாட்டல் (உ)	3.4.3	பதிவுசெய்யப்பட்ட விழங்குநர்கள் காணப் படுகையில் வெளி நிறுவனங்களிலிருந்து 127இ700 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
(ஆ) 2015 யூன் 17 ஆம் திகதிய ீநுனு 3.்.2015 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் பிரிவு	2.1	நிதியத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் தவிசாளர் பணிக்கமர்த்தப்பட்டுள்ள போதிலும் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு படிகளுக்கு உரித்துடைய வர்கள் இல்லாதபோதிலும். ஆதற்கு மாறாக,

தவிசாளருக்கு 2019 ஆம் ஆண்டில் 07 சபைக் கூ

ட்டங்களில் கலந்துகொண்டதற்கான படியாக 42,000 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 12 (எ) யின் தேவைப்பாடுகளுக்கமைவாக, கூட்டுறவின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் இணங்காத வகையில் கூட்டுத்தானம் செயற்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) யின் தேவைப்பாடுகளுக்கமைவாக, நிதியத்தின் வளங்கள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், சரியான விதத்தில் பயனுறுதியாகவும், வினைத்திறனுடனும் உரிய ஒழுங்குவிதிகளுக்கமைவாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை

2.1 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வருகின்ற அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 2019 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்திற்கமைவாக நிதியத்தால் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டிய தொழிற்பாடுகளில், 2.41 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ள ஏழு தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேற் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, முன்னைய ஆண்டு மற்றும் ஆய்வாண்டுகளில் விடயப்பரப்பில் காணப்பட்ட பலவீனம் காரணமாக சொல்லப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்த போதிலும், அதனைக் கவனத்தில் எடுக்காது முகாமைத்துவத்தினால் வருடாந்த செயற்றிட்டத்தில் தொடர்ச்சியாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்றிட்டத்தினடிப்படையில், மருத்துவ உதவி வழங்குதல். செயற்கை உறுப்புகளை வழங்குதல் மற்றும் லொத்தர் விற்பனையை அதிகரித்தல் போன்ற ஆய்வாண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 85 ஆக இருந்திருந்தகபோ், அதற்காக செலவுறப்பட்ட தொகை 1.3 மில்லியன்

ரூபாவாகும். ஆகையால், பௌதீகச் செயலாற்றுகை 17 வீதத்தில் இருந்தபோதிலும், நிதிச் செயலாற்றுகை 39 வீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

டபிள்யு.பீ.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

கணக்காய்வு அறிக்கை 2019 தொடர்பில் பணிப்பாளர் சபையின் மீளாய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வச் சட்டத்தின் 12 ஆம் இலக்க நியதிகளில் 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய ஒழுக்காற்று தேவைப்பாடுள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.2. (அ) மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு எதிராக மீள்மதிப்பீட்டு நட்டத்தை பதிவழிப்புச் செய்வதற்கும், நடப்பு ஆண்டில் வருமானக் கூற்றிலிருந்து மீதியை கழிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டதன் பின்னர், 2019 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்கெடுப்புச் சபையில் சொத்துக்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சொத்துக் களின் அனைத்து வகுப்புகளும் 2019 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, எதிர்காலத்தில் பெறுமானத்தேய்வு நிறைவுசெய்யப்படுவதற்கு முன்னர் உரிய அனைத்து சொத்துக்களுக்கான மீள்மதிப்பிடு மேற் கொள்ளப்படும்.

(இ) முன்னைய ஆண்டு சீராக்கங்களை மேற்கொள்கையில், 2019 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சினால் மாற்றப்பட்ட 35,000,000 ரூபா பெறுமதி யான KO 7519 ஆம் இலக்கத் மோட்டார் வாகனத்தையும் தொழில் திணைக்களத்தல் அளிக்கப்பட்ட 125,500 ரூபா பெறுமதியான மரத் தளபாடங்ககள் மற்றும் உபகரணங்களையும் மூலதனத்திலிருந்து அகற்றுவதற்கும், அரசாங்க அன்பளிப்புகளாக பிறிதொரு கணக்கில் சீராக்குவதற்கும், சொத்தின் பெறுமானத்தேய்வினை அகற்றுவதற்கும் மற்றும் ஒதுக்கமாக ஆண்டின் நிறைவு நிலுவையைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) தற்பொதைய ஆண்டுக்காகமுன்னைய ஆண்டிலுள்ள நிலையான வட்டி நிலுவையைப்பயன்படுத்தி ஆண்டுக்கான வருமானக் கூற்றில் வைப்பிலிப் படவுள்ள நிலையான வைப்புத் தொகையையும், மீளாய்வு ஆண்டுக்காக அடுத்த ஆண்டில் நிலுவையுள்ள நிலையான வைப்பு வட்டியையும் கணிப்பதற்கு கட்டுப்பாட்டு கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

திரட்டிய நிதியம் ஆண்டு காலப்பகுதியில் காலாண்டுக்கொருமுறை தவணை முறையில் பெறப்படுவதற்கு லொத்தர் வருமானம் நிலுவையாக இருக்கின்ற காரணத்தாலும், ஆண்டு காலப்பகுதியில் முதலீடுகள் மற்றும் ஆண்டின் மத்திய பகுதியில் முதிர்ச்சியடைவதன் காரணமாகவும், ஆண்டின் வருமானமாக வருமானக் கூற்றில் வட்டி வருமானத்தை உள்ளடக்க வேண்டியிருந்தது.

பண ஓட்டக்கூற்றுக்கு ஆண்டின் மேலதிகம் எடுக்கப்பட்டதன் மூலம் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டதனூடாக ஆண்டின் நிலையான வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம் கணிக்கப்பட்டுள்ளமையாலும், நடைமுறை ஆண்டிலும், முன்னைய அண்டிலும் பெறக்கூடிய நிலையான வைப்பு வட்டிக் கணக்குகளுக்கிடையில் வேறுபாடுள்ளமையாலும், கழிப்பனவுகளின் கீழ் சுட்டிக்காட்டப்படுவதுடன், செயலுறும் மூலதனத்தின் சேர்க்கைகள்நிலையான வைப்பு 2,692,742.10 ரூபா மீதான வட்டி நிலுவைகளின் ஆரம்ப மற்றும் முடிவு மீதிகள் பண ஓட்க்கூற்றிலிருந்து மீணடும் கழிக்கப்பட்டிருந்தது. அது, பண ஓட்டக்கூற்றினை சமமப்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தவதனால், மேலுள்ள தொகை, செயலறு மூலதனத்திற்கு சீராக்கமொன்றை மேற்கொண்ட பண ஓட்டக் கூற்று மிகைக்குச் சேர்க்கப்பட்டுள்ளது.

2. (அ) I கணினிகளைக் கொள்வனவு செய்வதில் கேள்வி கோரல் கடிதங்கள் 11 கம்பனிகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 4 நிறுவனங்களால் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில், விலை குறைவாக சமர்ப்பித்திருந்த நிறுவனம் கணனிக்கான விலையாக 124,500.00 ரூபாவினைக் குறிப்பிட்டிருந்தது. மேலும், ஏனைய அனைத்து நிறுவனங்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுடன் ஒப்பிடுமிடத்து,குறித்த நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுவில் 35,000 ரூபா வேறுபாடு மட்டுமே காணப்பட்டிருந்தது. இதன்படி, பெறுகைக் குழுவினதும், சிரம வாசனா நிதியத்தின் முகாமையாரினதும் வாய்மூல அறிவறுத்தல்களின்ப, விடயத்துக்குப் பொறுப்பான அலுவலர் தொழில்நுட்பக் குழுவின் முன்பாக தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் தொடர்பான மேலதிக விபரங்கள் பற்றி தொலைபேசி மூலம் குறித்த நிறுவனத்திடம் விசாரணை மேற்கொண்டிருந்தார். சொல்லப்பட்ட நிறுவனம், ஆவணங்களைத் தயாரித்த அலுவலர் அனைத்து விளக்கக்குறிப்புகளும் வழங்கப்படும் என்று குறிப்பிட்டு அனுப்பியுள்ள போதிலும், பெயரிடப்பட்டுள்ள மென்பொருள், மைக்குரோசொவ்ற் பொதி (வாழ்க்கைக்காலம்) சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ii. தொலைபேசி விபரக்கொத்தின் வர்த்தக விபரப் பக்கங்களில் பட்டியலிடப்பட்டிருந்த உரிய உபகரணத் தொகுதியை வழங்குகின்ற நிறுவனங்களிடமிருந்த விலைமனு கோரப்பட்டு, இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. காளான் பயிரிடுகை தொடர்பில் (சீலர்,பொலித்தீன்,1கி.கி,அளவு 5கி.கி தண்ணிர் கொள்களன் 71, தண்ணீர் விசுறும் கலன் 1) இதில் கிடைக்கவில்லை. ஆகையால் பதிவுசெய்யப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திடமிருந்து விலைமனு கொரப்பட்டிருந்தது.

நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவை தொடர்பான அனைத்து பதிப்பு செயற்பாடுகளைப் பெறுவது பொருத்தமானுத என்று அமைச்சின் செயலாளர் நடமாடும் சேவை தொடர்பான கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார். இதன்படி, தொலைபேசி விபரக்கொத்தின் வர்த்தக விபரப் பக்கங்களில் பட்டியலிடப்பட்டிருந்த நிறுவனங்களிடமிருந்து பதிப்புத் தொடர்பான விலை மனுக்களை செயலாளர் கோரியிருந்ததுடன், சிரம வானா நிதியமும் அதே நிறுவனத்திடமிருந்து கைநூல்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை பதிப்பிடுவது தொடர்பில் விலை மனுக்களைக் கோரியிருந்தது.

ஆ)அமைச்சின் முன்னாள் செயலாளர் தற்போது ஓய்வுபெறற்றுள்ளதுடன், அவரிடமிருந்து பணத்தை மிளப்பெறுவது நியாயமில்லை என்று பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. இருப்பினும் அமர்வுக்கான படி 2020 ஆம் ஆண்டிலிருந்து முன்னாள் தவிசாளரால் கோரப்பட்டிருக்கவில்லை.

2.1. அ), ஆ), 2018/2019 ஆம் ஆண்டுகளுக்கான செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விண்ணப்பங் களை பெறாமை பற்றி பணிப்பாளர்கள் சபை காலத்திற்கு காலம் தெரிவித் திருந்தது. ஆகையால், தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு குழு அமைக்கப் பட்டிருந்ததுடன், அதனது அறிக்கை செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில பணிப்பாளர்கள் சபைக்கும் அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

டீ.எம்.எஸ்.அபயகுணவர்தன
தவிசாளர்
சிரம வாசனா நிதியம்

பின்னிணைப்பு - 01

2019 ஆம் ஆண்டில் சிரம வாசனா நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பட்டியல்.

1. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

- 2019-01-17 ஆம் திகதி - கவுப் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்சாலை மற்றும் நீலகம பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்சாலை
- 2019-01-25 ஆம் திகதி - விஷன்கோ தனியார் லிமிடெட் மற்றும் லியோச் லங்கா பிறைவேட் லிமிடெட்
- 2019-01-28 மற்றும் 29 ஆம் திகதிகள் - கல்லோயா பெருந்தொட்டம்,கிங்குரான. அம்பாறை தயா அப்பிரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிடெட், நாமல் ஓயா மகாவலி அதிகாரசபை, றம்பக்கெனோயா வலய அலுவலகம், மகாஓயா. பின்தேன்னப்பற்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், மகாஓயா.
- 2019-01-29 ஆம் திகதி - எமறேல்ட் (பிறைவேட்) லிமிடெட். கொட்டாவ ஒறேஞ் (பிறைவேட்) லிமிடெட்.
- 2019-01-31 ஆம் திகதி - டி.எஸ்.ஐ கம்பனி, நாவின்ன சிலோன் பிஸ்கட் லிமிடெட், கொட்டாவ.
- 2019-02-14 ஆம் திகதி - சாம்சண்ஸ் & சண்ஸ் (பிறைவேட்) லிமிடெட், காலி, அமாரி ஹோட்டல்.
- அதிக அபாயமான அமுக்க இயந்திரங்களின் பரிசோதனை பற்றி சான்றுப்படுத்தப்பட்ட அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2019-02.- கேட்போர்கூடம், தொழில் திணைக்களம்.
- 2019-02-21 ஆம் திகதி - வீரா பஷன் மற்றும் சிலோன் நஷனல் இண்டஸ்றீஸ்,இரந்தேனிகலை.
- 2019-02-26 ஆம் திகதி – ராஜா மீன்பிடிப் பொருட்கள், ஓமந்தை றேட் மக்ஸ், வவுனியா
- 2019-02-28 மற்றும் 2019-03-01 ஆம் திகதிகள்- ரெக்ஸ்வின குளோத் (பிறைவேட்) லிமிடெடட், எஸ்.எம்.கே மிலின் என்ஜினியரிங்(பிறைவெட்) லிமிடெட், மேனகா றைஸ் புறேடக்ற் (பிறைவேட்) லிமிடெட், பொலநறுவை.
- 2019-03-29 ஆம் திகதி சண் கேன் கொண்ஸ்ரக்ஷன்ஸ், றேயின்கோ அப்பிரல், கண்டி மற்றும் கடுகண்ணாவை.
- 2019-03-29 ஆம் திகதி - மீரீஸ்வத்தை எஸ்ரேற்,களுத்துறை
- 2019-04-09 ஆம் திகதி - ஸ்பிரிங் வியூ தேயிலைத் தொழிற்சாலை – லேல்லுப்பிட்டிய

- 2019-05-23 ஆம் திகதி - இண்டஸ்றியல் பார்க், மீரியஜவில.
- 2019-06-11 ஆம் திகதி - மாவட்ட செயலகம்,இரத்தினபுரி
- 2019-08-29ஆம் திகதி - ஹிட்றாமணி காமன்ற் பிறைவேட் லிமிடெட், அகலவத்தை.
- 2019-07-09 ஆம் திகதி- மாவட்ட தொழில் அலுவலகம், களுத்துறை
- 2019-07-23 ஆம் திகதி- அம்புறோசைசா தேயிலை தொழிற்சாலை,வெலிமடை
- 2019-07-24 ஆம் திகதி – எல்-ரெப், குணகெல்லை தேயிலைத் தொழிற்சாலை, சவ்லாண்ஸ் தேயிலை தொழிற்சாலை.
- 2019-09-26,27 ஆம் திகதிகள் - தென்னை வளர்ப்பு சபை வாரிய பொல, ஏற்றுமதி ஊக்குவிப்பு கம்பனி, கல்கமுவை, இலங்கை கோகா வைபர் கம்பனி, கோபேய்கேன், பொரென்சியல் விஸ்கோம் கம்பனி, இரத்மல்வேவா, சில்வா பேர்னிசேர்ஸ் கம்பனி,வாரியபொல.
- 2019-10-07 ஆம் திகதி - அவிசாவலை இலங்கை முதலீட்டுச் சபை கேட்போர்கூடம்.
- 2019-09-10 ஆம் திகதி - லாவ்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,கொழும்பு-05.
- 2019-11-10 ஆம் திகதி- மன்னார்.
- 2019-12-10 ஆம் திகதி-றோவோட் லங்கா லிமிடெட்,ஜயானி பஷன் காமன்ஸ்,டும்றா ரெக்ஸ்,குருணாகல்.
- 2019-12-10 ஆம் திகதி – தொழில் திணைக்களம், நாரஹென்பிட்டி
- 2019-12-17 ஆம் திகதி - சாம்சன் இறப்பர் தொழிற்சாலை (பிறைவேட்) லிமிடெட், ரவி இண்டஸ்ரியல் (பிறைவேட்) லிமிடெட்,கம்பஹா.
- 2019-12-31 ஆம் திகதி-மெல்வா றோலிங் (பிறைவேட்) லிமிடெட், ரின்பாக் (பிறைவேட்) லிமிடெட், ரக்ஷா அப்பிரல் (பிறைவுட்) லிமிடெட், கம்பஹா.
- 2019-12-17 ஆம் திகதி-மாஸ் கிறீடா நிறுவகம்-மஹியங்கனை

2. வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

- ❖ 2019 பெப்ரவரி 07 ஆம் திகதி கேகாலை பிராந்திய இறப்பர் அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்தில்.
- ❖ 2019 பெப்ரவரி 11 ஆம் திகதி கண்டி, வட்டகொட ஸ்ரீ ஆனந்த போதி விகாரையில்.
- ❖ 2019 ஏப்பிரல் 02 ஆம் திகதி பதவியா பிரதேச செயலகத்தில்.
- ❖ 2019 மே 24 ஆம் திகதி உடவட்டுண பென்ஸ் றீட் பயிற்சி நிலையத்தில்.
- ❖ 2019 மே 24 ஆம் திகதி யாழ்ப்பாண தொழில் அலுவலகத்தில்.
- ❖ 2019 மே 31 ஆம் திகதி குருணாகல் கண்டியன் றிச் ஹொட்டலில்.
- ❖ 2019 யூலை 27&28 ஆம் திகதிகள் வெலிமடை மத்திய கல்லூரியில்.
- ❖ 2019 ஓகஸ்ட் 06 ஆம் திகதி கொஸ்லந்த விகாரையில்.
- ❖ 2019 செப்ரெம்பர் 03 ஆம் திகதி குளியாப்பிட்டி பிரதேச செயலகத்தில்.
- ❖ 2019 செப்ரெம்பர் 7 ஆம் திகதி கொஸ்லந்த ஆரியவன்சறாமயவில்.
- ❖ 2019 நவம்பர் 08 ஆம் திகதி ஹட்டனில்.
- ❖ 2019 நவம்பா 20&21 ஆம் திகதிகள் மத்துகமவில் / சூரியவெவவில்
- ❖ 2019 டிசெம்பர் 16 ஆம் திகதி திருகோணமலை நகர சபை மண்டபத்தில்.

3. மருத்துவ முகாம்கள் (கண் கிளினிக்)

- ❖ 2019 மார்ச் 06 ஆம் திகதி நித்திகலை பின்கந்த தோட்டத்தில்.
- ❖ 2019 ஏப்பிரல் 05 ஆம் திகதி பெல்வத்தை சீனி தொழிற்சாலையில்.
- ❖ 2019 ஏப்பிரல் 06 ஆம் திகதி மொனறாகலை பிரதேச செயகத்தில்.
- ❖ 2019 யூன் 18 ஆம் திகதி மிரிஜாவில இண்டஸ்ரியல் பார்க்கில்
- ❖ 2019 யூன் 29 ஆம் திகதி மாத்தளை டயனா தொழிற்சாலையில்
- ❖ 2019 யூலை 04 ஆம் திகதி பஸ்சறை பிரதேச சபை அலுவலகத்தில்.
- ❖ 2019 யூலை 04 ஆம் திகதி பொலநறுவை மாவட்ட தொழில் அலவலகத்தில்
- ❖ 2019 யூலை 05 ஆம் திகதி லுணுகலை பிரதேச செயலகத்தில்.
- ❖ 2019 யூலை 07 ஆம் திகதி மீகாஹகியுல விகாரையில்.
- ❖ 2019 செப்ரெம்பர் 12 ஆம் திகதி பிபில மெதகம பிரதேச செயலகத்தில்.
- ❖ 2019 செப்ரெம்பர் 19 ஆம் திகதி கெப்பிட்டிப்பொல பொருளாதார நிலையத்தில் மற்றும் உவா பரணகம ரத்னோடகம சனசமூக மண்டபத்தில்.
- ❖ 2019 செப்ரெம்பர் 23 ஆம் திகதி பாணந்துறை நஷ்சுரப் நிறுவகத்தில்.
- ❖ 2019 யூலை 29 ஆம் திகதி முந்தலம கிட்றாமணி ஆடைத் தொழிற்சாலை மற்றும் கல்விட்டி பொபி ஆடைத் தொழிற்சாலை.
- ❖ 2019 யூலை 18 ஆம் திகதி - பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகம்- யாழ்ப்பாணம் / மன்னார்
- ❖ 2019 ஒக்டோபர் 17 ஆம் திகதி - கட்டுநாயக முதலீட்டுச் சபை



ශ්‍රම වාසනා අරමුදල,අංක 97,ජාවත්ත පාර,කොළඹ 05.
දු.අ 011 2 588 936
ෆැක්ස් 011 2 588 937

சிரம வாசனா நிதியம், இல.97, ஜாவத்தை வீதி, கொழும்பு-05.

தொலைபேசி இல. : 011 2588936

தொலைநகல் இல. : 0112588937

Shrama Vasana Fund, No. 97, Jawatta Road, Colombo 05.
Tele. No. 011 2 588 936
Fax No. 011 2 588 937